# சத்திய வேத பாதுகாவலன்

Telegram: "CATHOLIC PRESS", JAFFNA. 1876,ம் வருஷம் ஆரம்பிக்கப்பட்டது Telephone: No. 300.

REGISTERED AT THE CEYLON G. P. O. AS A NEWSPAPER.

"கர்த்தர் நகரத்தைக் காக்காவிட்டால் அதைக் காக்கிறவன் கண்விழிப்பது வியர்த்தம்"

82-ம் புத்தகம் | யாழ்ப்பாணம் 1957-ம் ஆண்டு புரட்டாசி மாதம் 26-ந் திகதி வியாழக்கிழமை — பிரிசதம் 10 | 37-ம் இலக்கம்


## மாதா ஆசிக்கும் ரோசாமலர்

— எம். அந்தோனிப்பிள்ளை, B. A. —

மக்கள் இயல்பாக எல்லாக்காரியங்களிலுஞ் சீரையுஞ்சிறப்பையும் விரும்புவார்கள். சீர்சிறப்பை ஆசிப்பது குற்றமன்று. ஆசை மட்டுப்படுத்தப்பட்டால் நல்லபலன் கொடுக்கும். கடவுள் வழிபாட்டிலும் இந்தஆசையை ஏன் கடைப்பிடிக்கக் கூடாது? எல்லாவற்றிலுஞ் சிறந்தசெபத்தை நாம்ஏன் செய்யக்கூடாது?

செபங்களுள் சிறந்தசெபங்கள் எவை? செபமாலையில் அடங்கியுள்ள செபங்கள்தான் மிகவுஞ்சிறந்தவைகள். செபமாலையை நாம் சிலுவைஅடையாளத்துடன் தொடக்குகிறோம். நம் பரிசுத்தமாதாவாகிய திருச்சபை உண்டுபண்ணிய செபம்இது. சிலுவை அடையாளம் திருச்சபையால் எல்லாவற்றையும் ஆசீர்வதிக்க உபயோகிக்கப்பட்டு வருகிறது. சிலுவை அடையாளமின்றேல் ஆசீர்வதித்தலும் இல்லையென்பது மிகையாகாது.

அதன்மேல் எங்கள்விசுவாசத்தைச் சிறந்தமுறையில் பகிரங்கமாய் அறிக்கையிடும் "விசுவாசமந்திர"த்தை ஓதுகிறோம். பின்னர் உந்நதபரமண்டலங்களில் தேவதூதர்களும், சுத்தவாளர்களும்பாடும் நித்திய தேவஸ்துதியில் நாமும் சேர்ந்துகொள்வதற்காகத் திரித்துவதோத்திரத்தை ஓதுகிறோம்.

எமதுஇரட்சகரான யேசுக்கிறீஸ்துநாதரின்செபம் 'பரமண்டலமந்திர'த்தில் அடங்கியிருக்கிறது. இதிலே மக்கள் தேவனிடம் இரந்துகேட்கத்தகும் அவசியமான எல்லாவேண்டுதல்களும் அடங்கியிருக்கின்றன. இதனைத்தொடர்ந்து கபிரியேல் என்னும் தேவதூதனாலும், பரிசுத்தகன்னிமரியாயின் பந்துவாகிய அர்ச். எலிசபேத்தம்மாளாலும், திருச்சபையாலும் கோர்க்கப்பட்ட பிரியதத்தமந்திரத்தை நாம்திரும்பத்திரும்ப ஓதுகிறோம்.

ஒருசெபத்தைத் திரும்பத்திரும்பச் செபமாலையில்சொல்வான் ஏன்என்று சிலதருணங்களில் பலர்கேட்கலாம். ஒரேசெபத்தைத் திருப்பித்திருப்பிச் செபமாலையில்ஓதுவது வியப்புக்குரியதொன்றல்ல. எங்கள்நாயகன் யேசுக்கிறீஸ்து பூங்காவனத்தில் அனுகிபிதாவைப்பார்த்து வேண்டுதல்செய்த தருணத்தில் ஒரேசெபத்தைப் பலமுறை திரும்பித்திருப்பிச் சொன்னார். வேதாகமத்திலுள்ள மிகஅழகான சங்கீதமொன்றில் சிலமங்களவாழ்த்துகள் திரும்பத்திரும்பப் பலமுறைகூறப்படுகின்றன. "உந்நதபரமண்டலங்களிலுள்ள சர்வேசுரனுக்கு ஸ்தோத்திரம், ஏனெனில், அவர்நல்லவர்." சர்வவல்லபசுரூபியான சர்வேசுரன் பரிசுத்தர், பரிசுத்தர்என்னும் திருப்புகழை மோட்சத்திலுள்ள தேவதூதர்கள் இடைவிடாதுநித்தியமாய்த் திருப்பித்திருப்பிக் கூறுகிறார்கள்.

செபமாலை சொல்லும்போதும் பல செபங்கள் திரும்பத்திரும்பச் சொல்லப்படுவது உண்மைதான். ஆனால், அச்செபங்களை ஓதுஞ்சமயத்தில் எங்கள்நாயகன் யேசுக்கிறீஸ்துவினதும், பரிசுத்ததேவதாயாரினதுஞ் சீவியவரலாறுகளைத் தியானித்துக்கொண்டு செபிக்கிறோம். இது சுவிசேஷத்தைத் திரும்பத்திரும்ப எண்ணித் தியானிப்பதற்குச் சிறந்த ஓர் வழியாகும்.

செபமாலை ஓதத்தெரியாத கத்தோலிக்கர்இல்லையெனலாம். அநேகர் சிறுபிராயத்திலேயே செபமாலைஓதப் பழகியிருக்கிறார்கள். எங்கள்ஞானத்தாய் தந்தையர்கள் அல்லது இனபந்துக்கள் அல்லது பிதாமாதாக்கள் நாங்கள் புதுநன்மைபெற்ற தினத்தன்று அல்லது பிறந்ததின வைபவத்தன்று செபமாலைகளை வெகுமதிப்பொருட்களாக எங்களுக்குக் கொடுத்திருக்கிறார்கள். அச்செபமாலைகளை வெகுமதியாகப்பெற்ற நாளிலிருந்து நாம் அதைச்செபிக்கும் முறையையும் கற்றுக்கொண்டிருக்கிறோம். செபமாலைஓதும்முறையை மறப்பது சுலபமல்ல. ஆனால், அதை மிகச்சுலபமாக ஓதமறந்துவிடுகிறோம். எத்தனையோகத்தோலிக்கர் செபமாலைசொல்லும் வழக்கத்தைக் கைநெகிழ்த்திருக்கிறார்கள். எம்மில் எத்தனைபேர் செபமாலைவைத்திருக்கிறோம். செபமாலைவைத்திருக்கிறவர்களிலும் எத்தனைபேர் அதைப்பெட்டிகளிலும் இலாச்சிகளிலும் துருப்பிடிக்கவிட்டுக் கவனியாதிருக்கிறோம். எம்மில்எத்தனைபேர் செபமாலையைக் கையிலேந்தி அதை ஓதுகிறோம்? எத்தனைபேர் ஞாயிற்றுக்கிழமைப் பூசைவேளையில் அல்லது வருடத்தில் இரண்டொருமுறை மட்டும் தெண்டைக்குத்தேவையாய்ச் செபமாலைஓதிவருகிறோம்.

தாங்கள் சிறுவர்களாயிருந்த காலத்தில் வைத்திருந்தசெபமாலையைப் பெரியவர்களான காலத்திலும் மக்கள் கையிலேந்தி ஓதும்போது அது அவர்கள்மனதில் பலஎண்ணங்களை எழுப்பிவிடும். அவர்களின் பாலியப்பருவத்தையும், அக்காலத்தில் அவர்களிடமிருந்த மனத்தூய்மையையும், கள்ளங்கபடமற்ற இன்பஉணர்ச்சிகளையும் அதுஞாபகமூட்டும். யேசுமரியென்னும் பரிசுத்தநாமங்களையும், அவர்களின் அருள்நிறைந்த பிரசன்னத்தையும், பாதுகாவலையும் செபமாலைகொண்டுவருகிறது. செபமாலைஓதிவருகிறவர்களின் விசுவாசம், நம்பிக்கை, தேவசிநேகம் அதிகரிக்கிறது. வெதுவெதுப்பானவர்களிடத்தில் வைரமான பத்தியருட்சியைக் கிளப்பிவிடுகிறது.

பாப்புமார், மேற்றிராணிமார், குருமார், பிதாமாதா, பிள்ளைகள், கணவன் மனைவி, ஆச்சிரமங்களில்வசிக்கும் சந்நியாசிகள், மடங்களிற்சீவிக்கும் கன்னியர்கள், வீடுகளில்இருக்கும் சகோதரர் சகோதரிகள், புண்ணியசாங்கோபாங்கத்தில் நிலைகொள்ளத்தெண்டிக்கும் பரிசுத்தவான்கள், தேவனிடம் சரணாகதியடைய ஆசிக்கும் மனந்திரும்பின பாவிகள்எல்லோருஞ் செபமாலை ஓதுவது அவசியம்.

(தொடர்ச்சி 5-ம் பக்கம்)

## கிறீஸ்துவின் இராச்சியம்

( மத்தேயு 13 : 47 )

— A K. —

"மேலும் விண்ணுலகஇராச்சியம் கடலிலேவீசினவலைக்கு ஒப்பாயிருக்கிறது. எல்லாவகைமீன்களும் விழுகின்றன. வலைநிறைந்ததும் அதை இழுத்து, கரையில்உட்கார்ந்து, நல்லவைகளைப்பொறுக்கிப் பாத்திரங்களில் போடுகின்றனர்; கெட்டவைகளையோ வெளியேஎறிகின்றனர். உலகமுடிவிலே இவ்விதம்தான் இருக்கும். சம்மனசுகள்சென்று தீயோர்களை நீதிமான்கள்நடுவிலிருந்து பிரிப்பார்கள். அவர்களை நெருப்புச்சூளையில் எறிவார்கள். அங்கே அழுகையும், பற்கடிப்பும் இருக்கும்."

இந்தஉவமையிலே நமதுஆண்டவர் மானிடரை மச்சங்களுக்கு ஒப்பிடுகிறார். இதில் விசேஷம்ஒன்றுமில்லை. கலிலேயாக்கடல்அருகில் வலையை வீசிக்கொண்டிருந்த சீமோனையும், அவரதுசகோதரரையும் அழைத்தது எவ்விதம்? "நீங்கள் என்பிறகேவாருங்கள், நான்உங்களை மனிதர்களைப் பிடிக்கிறவர்களாக்குவேன்" என்றார் (மத். 4:19). யேசு சீமோனின்படகிலேறிப் புதுமையாகப் பெரியமீன்பாட்டைக் கொடுத்தபோது: சீமோன் "ஆண்டவரே, நான் பாவியான மனுஷன். என்னைவிட்டு அகலும்" என்றார்... ஆனால், யேசுநாதர் சீமோனைநோக்கி: "பயப்படாதே, இதுமுதல் நீமனுஷரைப் பிடிக்கிறவனாயிருப்பாய்" (லூக். 5:8) என்றார் எனவே, கிறீஸ்துநாதர் தமதுசீடர்களின் அப்போஸ்தலிக்க வேலையை மீன்பிடிப்பதற்குஒப்பாக உருவகப்படுத்தியிருக்கின்றார். இதை மேற்கொண்டு, அர்ச். பெரியகிறகோரியார், "உலகமே ஓர்கடல்; மானிடர் மீன்கள்; அவர்களைப்பிடிக்கும் பெரியவலை திருச்சபை" என்கிறார்.

திருச்சபையில் மக்கள் சேருகின்றனர். கிறீஸ்துவுடைய அரசின் குடிமக்களாய் ஞானஸ்நானம்பெற்று உட்புகுந்தபோதிலும் அன்றாடவாழ்விலே அனைவரும் கிறீஸ்துவுடையஇராச்சியத்தின் சட்டதிட்டத்தின்படி நடந்துவருகின்றனரா? இல்லை. ஒருசிலர் கிறீஸ்துவர்களெனும் வெறும்பேர்தான். அவர்களது அலட்சியமனப்பான்மை மிகவும் வருந்தத்தக்கது. வேறுசிலர் யேசுவையும், அவரதுதிருச்சபையையும் இழிவுபடுத்தவே கிறீஸ்துவர்களானதுபோல ஒழுங்கீனமாய் நடந்து அபத்தக்கொள்கைகளிலும் அமிழ்ந்தியிருக்கின்றனர். ஆனால், அநேகர் கிறீஸ்துவின் நோக்கின்படி தூயவாழ்வு வாழ்கின்றனர். கடவுளை வழிபடுகின்றனர். ஆத்மீகவாழ்விலே ஆர்வங்கொண்டு ஏனையமக்களையும் கிறீஸ்துவின் இராச்சியத்திற்கு அழைத்துவர முற்படுகின்றனர். இவ்விதம் பலவகைக் கிறீஸ்துவர்கள் திருச்சபையில் இருந்துவருகின்றனர்.

திருச்சபை பரிசுத்தசபை. கெட்டவர்கள்இருப்பது அப்புனிதசபைக்கே இழுக்கு. அவர்களை உடனே அகற்றிவிடவேண்டுமென்று சிலர்விரும்பலாம். அவர்களைக்கண்டு சினங்கொள்ளலாம். நமதுஆண்டவர் இந்தஉவமையின்வழியாகப் பொறுமையைக்கற்பிக்கின்றார். நல்லோரும், தீயோரும் உலகமுடிவுவரையில் ஒன்றாய்வாழ்ந்து வருவார்கள்என்பதை வற்புறுத்திக்கூறுகின்றார். வலையிலே விழுந்தமச்சங்கள் நல்லவைமட்டுமல்ல. பயனற்றமச்சங்களும் வலையில்இருக்கின்றன. வலை தண்ணீரில் இருக்கும்போதே நல்லவைகளையும், கெட்டவைகளையும் மீனவர்கள் பிரிப்பதுவழக்கமல்ல. பிரிக்கவுமியலாது. அவர்கள் வலையைக் கரைக்குக் கொண்டுவந்தபின்னரே நல்லவைகளைக் கூடைகளில்போட்டுக்கொள்கின்றனர். பயனற்றவைகளைத் தூரஎறிகின்றனர். அஃதேபோல் உலகமுடிவில் நல்லோர்வான்வீடுசேருவார்கள். தீயோர்எரிநரகத்தில் புதைக்கப்படுவார்கள்.

ஒருசிறியகுறிப்பு இங்குகவனிக்கத்தக்கது. வலையில்விழுந்த கெட்டமச்சங்கள் நல்லவைகளாய்மாற முடியாது. ஆனால், கிறீஸ்துவமக்களிடம் அப்படியல்ல. ஒருவன் எவ்வளவுஈனவாழ்க்கை வாழ்ந்துவந்தபோதிலும் கிறீஸ்துவின் அருட்பெருக்கால் தனதுபாவவாழ்வை மாற்றிஅமைக்கலாம். துக்கக்கண்ணீர்வடித்துப் பச்சாத்தாபத்தால் இதயத்தூய்மை அடையலாம். தீயோரெனத் தள்ளிவைக்கப்பட்டவர்கள் முதலாய் நீதிமான்களென ஏற்றுக்கொள்ளும்அளவுக்கு மாறலாம். உலக இறுதிநாளில்தான் யாதொருமாற்றமும் இயலாது.

மச்சங்கள்அனைத்தும் வலையிலே இருந்தபோதிலும், எல்லாவற்றிற்கும் கரைசேரும்பேறு கிட்டவில்லை. பல மீன்கள் தூரஎறியப்பட்டன. அதுபோல நாமெல்லோரும் திருச்சபையின்உறுப்புகளே. நமதுவிசுவாசத்தால் இன்னும் திருச்சபையில்இருக்கின்றோம். ஆனால், விசுவாசம்மட்டும் மோட்சம்அடையப் போதாது. கெட்ட கிறீஸ்துவர்களும் விசுவாசிகளே. நல்ல கிறீஸ்துவர்களும் விசுவாசிகளே. விசுவாசத்துடன் தேவஇஷ்டப்பிரசாதமும் இயங்கவேண்டும். கிறீஸ்துவின் சீவியம் நாம்சீவிக்கவேண்டும். நமது கிறீஸ்துவவாழ்வு பிறர்சிநேகக்கிரிகைகளில் முழுமையடையவேண்டும்.

"மனிதன் கிரியைகளினாலேயன்றி, விசுவாசத்தினாலேமாத்திரம் நீதிமானாவதில்லையென்று காண்கிறீர்களே...... ஆவியற்றசரீரம் செத்ததாயிருக்கிறதுபோல, கிரியைகளில்லாதவிசுவாசமும் செத்ததாயிருக்கின்றது (யாக. 2:26).

நாமெல்லோரும் நல்லஉத்தமகத்தோலிக்காராய்த் திருச்சபையின்போதனைப்படியே நடந்து, இன்றும்என்றும் கிறீஸ்துவின் அரசில்வாழ முயற்சிப்போமாக!

கிறீஸ்துஇராசா வாழ்க! அவரது இராச்சியம்வருக!

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தேமொழி

'அணி'

அந்தச்சிறிய பாடசாலைவிடுதியைக் கண்டதும் எனக்கு என்னவோபோன்றிருந்தது. எத்தனை நூற்றாண்டு விழாக்களை அது கொண்டாடியிருக்கின்றதோ! உடைந்த ஓடுகளும், சிதைந்த கதவுகளுமாக அது ஒரு ஆண்டியைப்போல் தோன்றியது. இதைத்தான் இனிக்கட்டி அழவேண்டுமா?

சாமிபுரத்திலுள்ள சிறிய கிராமப் பாடசாலையில் தான் எனக்கு வேலை கிடைத்தது. சாமிபுரம் பெரியஊரல்ல. சிறிய பட்டிக்காடுதான்.

"வாழத் தெரியாதவனுக்கு வாத்தி உத்தியோகம்" என்றவன்வாயில் பாலை வார்க்கவேண்டும். நாலுபேரைப்போல் வாழத்தெரிந்தால் பீ.ஏ. பட்டம்பெற்ற நான் இதைக் கட்டி அழுவேனா? ஏழைகள்படித்தால் ஆசிரியவேலை. செல்வர்கள்படித்தால் சமூகத்தின் உயர்ந்த வேலைகள். இதுதான் சமுதாயபிரமனின் தலையெழுத்தா?

வகுப்புத்தொடங்கியது. பிள்ளைகள் வகுப்பில் அமர்ந்திருந்தனர். எனது எதிர்கால மாணவர்திலகங்களைப் பார்த்ததும் வயிற்றுவலி பிடித்தது. பல்லை இளித்துக்கொண்டிருந்தான் ஒருவன். மூக்கை வடித்துக்கொண்டிருந்தான் இன்னொருவன். தலையைச் சொறிந்துகொண்டிருந்தான் மற்றொருவன். இப்படியெல்லாம் இருந்தனர் எனது மாணவமணிகள்.

பெயர்களைப் படிக்கத் தொடங்கினேன். அப்பாடா! என்ன குறும்பு! பட்டிக்காட்டுப் பாடசாலையிலுமா இப்படி நடந்துகொள்ளவேண்டும்? ஒருவேளை என்னை வாழத்தெரியாதவன் என்று அறிந்துதான் அவர்கள் கிண்டல்பண்ண ஆரம்பித்தனரோ? இரண்டொருபிள்ளைகளை வெளுத்துவாங்கினேன். அவர்கள் ஓவென்று அலறினர். நான் இரங்கவில்லை. எனது இருதயந்தான் இரும்பாகி ஆண்டுகள் பல ஆகிவிட்டனவே. "சார்..."என்ற குரல்கேட்டுத் திரும்பிப் பார்த்தேன். இரண்டு பிள்ளைகள் குத்துச்சண்டை பழகிக்கொண்டிருந்தனர். இந்தஅழகில் அடிக்காமல் என்னசெய்ய முடியும்?

பெயர்களைப் படிக்கத் தொடங்கினேன். சோணகிரி, அட சங்கடமே! எடுத்த எடுப்பிலேயே இந்தச்சோணகிரியா வரவேண்டும்? தேமொழி என்று அடுத்தபெயரைப் படித்தேன். பிள்ளைகள் கொல்லென்று சிரித்தனர். எனக்குக் காரணம்புரியவில்லை. யார் தேமொழி என்றுகேட்டேன். மூலையில் அமர்ந்திருந்த சிறுபெண்ணைச் சுட்டிக்காட்டினர். அவள் மிரளமிரள விழித்துக்கொண்டிருந்தாள். "நீயா அம்மா தேமொழி?" எனக் கேட்டேன். அவளும் "ஆம்"என்று தலையை அசைத்தாள். "ஏன் சிரிக்கிறீர்கள்?" என்று பிள்ளைகளைக் கேட்டேன்.

"இவங்க அம்மா ஒருவேலைகாரி" என்றான் ஒரு சுட்டிப்பயல். கன்னத்தில் ஒருஅறை கொடுத்துவிட்டு "இனிமேல் ஊர்வம்பொன்றும் இங்கிருக்கக்கூடாது, தெரிந்ததா?" என அதட்டினேன்.

பஞ்சத்தில் உழலும் பாட்டாளிமக்களின் உழைப்பைச்சுரண்டி மஞ்சத்தில்வாழும் கண்ணியமானமனிதரைப் பெரியமனிதர்என்று போற்றும் உலகமானது பாடுபட்டுஉழைக்கும் மக்களை வேலைக்காரர் எனக் கிண்டல்பண்ணுகிறது. சமூகத்தின்போக்கே புரியவில்லை.

ஏழைஒருவன் வயிறுகழுவ ஓரணாத் திருடுவது களவு. பெரியமனிதர் வியாபாரம்என்றபோர்வையில் கோடிக்கணக்கிலே ஏப்பமிடுவது வணிகநுணுக்கம்.

என்ன உலகமடா! வேலைக்காரி... இதில் என்னதவறு! வேலைசெய்வது குற்றமா?

"சார்!..." என்ற குரல்கேட்டுத் திரும்பினேன். பெயர்களைத் தொடர்ந்துபடிக்கத் தொடங்கினேன். கருப்பாயி... மாடசாமி... சியாமளா... இப்படியெல்லாம் வாசித்து முடித்தேன்.

"தேமொழி!......" ஒரு வேலைகாரி தன்குழந்தைக்கு எவ்வளவு அழகாகப் பெயர் இட்டிருக்கின்றாள்!

"தேமொழி! உங்கம்மா என்ன வேலை செய்கிறாள்?" — நான் கேட்டேன்.

"மற்ற வீடுகளில் சமைத்துக் கொடுப்பாங்க"—அவள் சொன்னாள்.

"உங்கப்பா?"

"தேமொழிக்கு அப்பா இல்லைசார்! அவங்கஅம்மாவின் முகத்தைப்பார்த்துவிட்டு ஒருமாதிரிப் பரிகாசமாகப் பேசுவாங்க ஊரில்"— வெடுக்கென்று கூறினான் ஒருவன்.

"யாரடா உன்னைப் பேசச்சொன்னது?" தேமொழி தேம்பித்தேம்பி அழத்தொடங்கினாள்.

"தேமொழி! உங்கப்பா எங்கம்மா?"— குழைவாகக்கேட்டேன்.

"அப்பா இல்லை."

"இறந்துவிட்டார்களா?"

"தெரியாது."

"ஓடிவிட்டார்களா?"

ஒன்றும்பேசவில்லை அவள். இன்னும்கேட்டு அவளை அழச்செய்ய நான் விரும்பவில்லை.

தொடர்ந்து பிள்ளைகளுக்குப் பாடம் படிப்பித்தேன். பாடத்தில் கவனம் செல்லவில்லை. தேமொழி வகுப்பில் கெட்டிக்காரியாக இருந்தாள். அவள் மீது எனக்கு இனந்தெரியாத அன்பு ஏற்பட்டது. "அப்பாவைப்பற்றித் தெரியாது"என அவள்கூறியது எனது இருதயத்தை வாள்கொண்டு யாரோ அறுப்பதுபோன்றிருந்தது. இந்த நினைவு என்னைஓயாமல் வாட்டிவதைத்தது. மனச்சான்றுஎன்ற ஒன்றுமட்டும் இல்லாவிடில் எவ்வளவுநிம்மதியாக வாழலாம்! வெறிபிடித்தவன் போன்று அவளைநோக்கினேன். அவளது அப்பாஎங்கே? எனது மனம் என்னவெல்லாமோ நினைத்துஏங்கியது.

"தேமொழி! உங்கம்மா பெயரென்ன?" ஆவலுடன் கேட்டேன்.

"தேன்மலர்"என்று மெதுவாகக் கூறினாள் சிறுமி.

"ஆ! என்ன தேன்மலரா?" பரபரப்புடன் கேட்டேன்.

"ஆம்!" தலையை அசைத்தாள் சிறுமி.

எனதுஇருதயம் நின்றுவிடும்போல் இருந்தது. உணர்ச்சி அற்றவன் போன்று அப்படியே நின்றுகொண்டிருந்தேன். வகுப்பு முடிந்தது. பிள்ளைகள் புறப்பட்டனர். தேமொழியைமட்டும் நிற்கச்செய்தேன். மற்றப் பிள்ளைகள் போய்விட்டனர்.

"தேமொழி! உனதுஅம்மா எங்கே இருக்கிறாள்?" கொஞ்சிக்கேட்டேன்.

"வீட்டில்."

"வீடுஎங்கே இருக்கின்றது?"

"தெருக்கோடியில் கடைசிக் குடிசை."

"நீயும் அம்மாவும் தனிமையாகவா இருக்கிறீர்கள்?"

"ஆம்."

எனது விழிகளில் நீர்மல்கியது. தேமொழியைத் தூக்கி அணைத்து முத்தமிட்டேன். அவள் மிரளமிரள விழித்துக்கொண்டிருந்தாள். சட்டைப்பையில் இருந்து ஐந்துரூபாவை எடுத்துக் குழந்தையிடம் நீட்டினேன். அவள் வாங்கவில்லை. கொண்டுபோய் அம்மாவிடம் கொடுஎன்றேன். அப்போதும் அவள் வாங்கவில்லை. என் கண்களில் நீர் வடிந்துகொண்டே இருந்தது.

வள்ளிபுரத்தில்தான் நான் பிறந்தேன். தேன்மலரும் வள்ளிபுரம் தான். அவளுக்குப் பெற்றோர்இல்லை. பாட்டியின் அணைப்பில் அவள்வளர்ந்து வந்தாள். நாங்கள் இருவரும் ஒரே வகுப்பில் படித்துவந்தோம். அவள் நல்லஅழகி. எங்கள்வகுப்பில் எல்லோருக்கும் அவள்மீது 'ஒருகண்'. அழகில்தானே பெண்மையைக் காண்கின்றனர் இளைஞர். நான்மட்டும் அதற்கு விதிவிலக்கா? தேன்மலரின் அழகில் மயங்கினேன். அவள் அன்பிற்காக எத்தனையோபேர் போட்டியிட்டார்கள். எனக்குத்தான் வெற்றி கிடைத்தது. அதன்பயனாக விரைவிலே திருமணமும் முடிந்தது. அழகில்சிறந்த ஒருமங்கையை மனைவியாகப்பெற்றேன் என்ற பெருமையில் ஊரில் அளவு மீறியே தலைநிமிர்ந்திருந்தேன்.

ஆனால், அழகு...? அது என்ன மனிதரின் நிரந்தரச்சொத்தா? தென்றல்காற்றைப்போல் திசைமாறக் கூடியதுஅது. இன்றுஇருக்கும்அழகு சந்தர்ப்பவசத்தால் நாளை மங்கிமறைந்துவிடலாம். வெளிஅழகில் மயங்கி அதையே பெரிதாகக் கருதுபவர்கள் அவ்வழகு மறைவதைக்கண்டதும் எத்தனை பயங்கரசூழ்நிலைக்கு ஆளாகிவிடுகின்றனர் என்பதற்கு நானேசாட்சி.

ஊரில் அம்மைநோய் வந்தது. பலர் அதன் பிளந்தவாயில் ஏப்பம்விடப்பட்டனர். ஏழைஎளியவர், படித்தவர்பாமரர், அழகுடையோர், அவலட்சண உருவுடையோர்என்ற பாகுபாடு நோய்க்குத் தெரியுமா? அழகின் "தேவதை" யென்று நான் கருதியிருந்த தேன்மலருக்கும் அது போட்டது. முடிவு அந்தஅழகுச்சிலையின் முகமெல்லாம் தழும்பு. மேடுபள்ளம். ஒருகண்ணும் குருடாகிவிட்டது. ஒரே அவலட்சணகோரம். தேன்மலர் வாடினமலராக மாறினாள். பார்க்க அருவருப்பாக இருந்தாள். அவளது அழகுக்காக அன்புபாராட்டிய நான் அவள்அழகிழந்துவிட்டதுகண்டு அவள் மீது வெறுப்புற்றேன். "இவளா என் மனைவி? சீ! இந்தஅவலட்சணத்தைத் தானா கட்டிஅழவேண்டும்? முடியாது, முடியாது; இந்தஊரில்இருந்து எங்கேயாவது ஓடிவிடவேண்டும்" என்று எண்ணினேன். அன்றே ஊரைவிட்டுப் புறப்பட்டேன். பின்பு என்ன நடந்ததென்றே தெரியவில்லை.

ஊரைவிட்டுத்தான் என்னால் பிரிய முடிந்ததேதவிர என்உள்ளத்தைவிட்டு என்னால் பிரிந்திருக்க முடியவில்லை. ஓயாது குத்திக்குடைந்துகொண்டிருந்தது என்மனச்சாட்சி. என்செயல் தவறல்ல என்றுகூறி வலுக்கட்டாயமாக ஆறுதல்பெற முயன்றேன். மனச்சான்று சும்மாவிடவில்லை. என்னை வாட்டிவதைத்தது.

எங்கெல்லாமோ அலைந்துதிரிந்தேன். படித்தவன், பட்டம்பெற்றவன், பண்பாடுடையவன் என்று பெயர்எடுத்த நான் நிம்மதியற்று நாய்போல் அலைந்தேன். என்படிப்போ, பட்டமோ எனக்கு ஆறுதலைத்தரவில்லை. தா முடியவில்லை, ம[illegible]க் குரலின்முன் இவை எடுபடவில்லை. பைத்தியம் பிடிக்காதகுறையாக அலைந்தேன்.

"தேன்மலர், தேன்மலர்" என்ற உணர்ச்சி அதிர்ச்சியூட்டும் மின்சாரம் போல் என்னை உலுக்கிவிட்டது. இந்த ஓயாதஅதிர்ச்சி எப்போது நிற்கும்? தேன்மலர் இப்போது அவலட்சணம் தான். ஆனால், அவளை அவலட்சணமாக்கிய அம்மை அவள் உடலைத்தானே தீண்டியிருக்கும். அவள் உள்ளம் நோய்படாத, பழைய அழகுப்புதையலாகத்தானே இருக்கவேண்டும். பின்னர் நான் ஏன் அவளை விட்டுவந்தேன்? எங்கள் ஆறுமாதத் திருமண வாழ்வை அற்பஆயுசாக்கிவிட்டது அந்தக்கொடிய நோய். ஆறுமாதம்...... ஒருவேளை தேன்மலர் கர்ப்பவதியாயிருந்தால்...

என்னால்காணமுடியாத சக்திஒன்று என்பிடரியில் கைபோட்டு எங்கோ தள்ளிக்கொண்டு சென்றது. சொந்த ஊருக்கே ஒருநாள்இரவு வந்துவிட்டேன்.

"எங்கே தேன்மலர்?"என்ற கேள்விக்கு, தேன்மலர் ஊரைவிட்டே ஓடிவிட்டாள்என்றபதில்தான் கிடைத்தது. ஓடிவிட்டாளா? ஒருவேளை தற்கொலை புரிந்திருப்பாளோ? எங்கெல்லாமோ அவளைத் தேடிஅலைந்தேன். இந்தஊரில் இருக்கின்றாள், அந்தஊரில்இருக்கின்றாள் என்று பலர் கூறினர். இறுதியில் சோர்வுற்ற உள்ளத்தோடு தேன்மலர் இறந்துவிட்டாள் என்ற முடிவோடுதான் இந்த ஊருக்கு வந்தேன். ஆசிரியபணியும் கிடைத்தது.

எனக்கு இருப்பே கொள்ளவில்லை. எப்படியும் தேன்மலரைக் காணவேண்டும், பழைய செயலுக்காக அவளிடம் மன்னிப்புக்கோரி, மனச்சாட்சியுள்ள கிறீஸ்துவனாக அவளது வரண்டவாழ்வைச் சீர்செய்யவேண்டுமென்ற துணிவோடு தேமொழியுடன் வீட்டிற்குச் சென்றேன். உரிமையோடு சென்றேன். தேன்மலர் வீட்டில் இருக்கவில்லை. வெளியில் சென்றிருந்தாள்.

சிறிய குடிசை அது. பிச்சைக்காரரின் குடிசைபோன்றிருந்தது. மூலையில் ஒரு திருஇருதயப்படம் இருந்தது. அருகில் சிறுமெழுகுதிரி எரிந்துகொண்டிருந்தது. சாவுடன் போரிடும் ஒருவன் மரணமூச்சு இழுப்பதுபோன்றிருந்ததுஅது. வாழ்வில் முதன்முறையாகச் செபிக்கத் தொடங்கினேன். பழைய தவறுகளுக்காக அழுதேன்.

எவ்வளவுநேரந்தான் அப்படி இருந்தேனோ தெரியாது. யாரோ வரும் அரவம். பின்னே திரும்பிப் பார்த்தேன். தேன்மலர் என்பின்னே நின்றுகொண்டிருந்தாள். அவள்கண்களில் நீர் ததும்பியிருந்தது. வெறிபிடித்தவன்போன்று அவள் பாதங்களில் விழுந்து அழுதேன்.

அவள் என்னை வியப்புடன் நோக்கினாள். "தேன்மலர்! என்னைத் தெரியுமா?" எனக் கேட்டேன். அவள் அழுதுவிட்டாள். "தேன்மலர்! நான் பாவி, கயவன், நெறிகெட்டவன், என்னை மன்னித்துவிட்டதாக ஒரு வார்த்தை சொல்லம்மா!"

"அப்படிச் சொல்லாதீர்கள் அத்தான்"என்று எனதுவாயைப் பொத்தினாள். சிறிதுநேரம் ஒன்றும்பேசாது இருந்தேன். வெளியே இருட்டிக்கொண்டிருந்தது. குழந்தையைத்தூக்கினேன். "தேன்மலர், என்னுடன் புறப்படு" என்றேன். அவள் விழித்தாள்.

"பயப்படாதே! நான் பழைய மிருகமல்ல, புதியமனிதன்; உன்னை எத்தனைநாள் தேடி அலைந்தேன் தெரியுமா? இன்றுதான் காணமுடிந்தது; உடனே புறப்படு" என்றேன்.

வள்ளிபுரம் வந்தபின்தான் அப்பாடா என்று அமைதியாக மூச்சுவிட்டேன். பெரியபாரம் ஒன்று தலையைவிட்டு இறங்கியதுபோன்று இருந்தது. தேன்மலரை நோக்கினேன். அவளது விழிகளில் நீர் ததும்பியிருந்தது.

"ஏனம்மா அழுகிறாய்?" என்று பதற்றத்துடன் கேட்டேன்.

"அத்தான்!"

"என்ன கண்ணே?"

"இன்றுதான் அத்தான் எனது இருண்டவாழ்வில் திரும்பவும்ஒளிவீசியது."

"இன்றுதான்மலர், எனதுவாழ்வும் மலர்ந்தது."

---

● மஸ்கோநகரிலுள்ள லிக்காசேவ்என்ற ருஷியமோட்டர்தொழிற்சாலை புதுமாதிரியான ஆடம்பரகார் ஒன்றைக் கட்டப்போவதாக மஸ்கோ வானொலி நிலையம் சென்ற 22-ந்திகதி அறிவித்துள்ளது. மணித்தியாலம் 105 மைல்வேகத்தில் செல்லக்கூடிய இந்தக் கார் குளிரானபிரதேசத்தில் காங்கையாகவும், காங்கையானபிரதேசத்தில் குளிராகவும்மாறும் யந்திரஅமைப்புள்ளதாய் இருக்குமாம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பாத்திமாவின் மூன்ருவது இரகசியம்

1917-ம் ஆ ஆடி மீ 13-ந் திகதியன்று பாத்திமாபதியிலே திருவருளால்தேவதாயார்வெளிப்படுத்தியதாகச் சொல்லப்படும் "இரகசிய" த்தின் மூன்ருவது பகுதியானது 1960-ம் ஆண்டு பிரசித்தமாக்கப்படுமென்று கருதிஞல் பியாஸா ஆண்டவர் தெரிவித்ததாகப் போர்த்துக்கேய பத்திரிகைகள் செய்தி வெளியிட்டிருக்கின்றன. கார்மேல் மூன்ருஞ்சபையின் சர்வதேசமகாநாட்டினை முன்னிட்டுச் சமீபத்திலே பாத்திமாவில் சமுகமாயிருந்தபோது இந்தக் கால எல்லையைக் கருதிஞல்ஆண்டவர் தெரிவிக்கலாயினர். பாத்திமாவிலே மூன்று பிள்ளைகளுக்கும் தேவதாயாரால் நம்பி ஒப்படைக்கப்பட்டதாகச் சொல்லப்படுகின்ற "இரகசிய" த்தின் முதல் இரண்டுபகுதிகள் காட்சிபெற்ற பிள்ளைகளில் ஒரேயாளாய் இன்னுமே உயிர்வாழ்ந்திருக்கின்றலூஸியாவால் 1927-ம் ஆண்டு பிரத்தியேகமாக வெளியிடப்பெற்று, 1942-ம் ஆண்டு பிரசித்தஞ் செய்யப்படலாயின. இவைகள் லூஸியாகண்ட நரகத்தைப்பற்றிய காட்சியையும், இரண்டாவது உலகயுத்தத்தைப் பற்றி முன்னதாகத் தெரிவிக்கப்பட்டதையும், தேவதண்டனையை நிறைவேற்றுவதில் ருஷியாவுக்குள்ளபாகத்தையும் அடக்கியிருக்கின்றன. மரியாயின் மாசற்ற இருதயத்துக்கு ருஷியாவை விசேஷவிதமாக நேர்ந்து ஒப்புக்கொடுப்பதும், மாதத்தின் முதலாம் சனிக்கிழமையிலே மாதாவின் மாசற்ற இருதயத்துக்கு நிந்தைப்பரிகாரமாகத் தேவநற்கருணை பெற்று ஒப்புக்கொடுப்பதை ஆரம்பிப்பதுமே ஏனைய வேண்டுகோள்களில் அடங்குவனவாகும்.

"இரகசிய"த்தின் மூன்ரும்பாகமானது தற்சமையம் ஓர்கார்மேல்சபைக் கன்னியாஸ்திரியாய் இருந்துவருகின்ற லூஸியாவாலே அவளுடைய மேற்றிராணியாரான லீறியாநகரின் கொறேயாடா சில்வா ஆண்டவரது கட்டளையின்பேரில் 1938-ம் ஆண்டு எழுதப்பட்டலாயிற்று. முத்திரையிட்டுப் பாதுகாக்கப்பட்டுவரும் இந்தக் கையேட்டுப் பிரதியை லூஸியாவைத் தவிர மற்றெவருமே இன்னும் வாசிக்கவில்லையென்று இவர் தெரிவித்திருக்கின்ருர். இந்தக்"கடைசிஇரகசியம்" முடிவற்ற வதந்திகளுக் கிடமாய் இருந்துவருகிறது. இது அந்திக்கிறிஸ்துவின் காலத்தையும், உலகமுடிவையும் வெளியிடுமென்றமட்டில்தானும் அவ்வளவுதூரம் இந்தவதந்திகள் பரந்துள்ளன. லூஸியா வெளியிட்டிருக்கும் ஒரேயொரு காரியம் யாதெனில், சிலருக்கு அது துக்கத்தையும், மற்றவர்களுக்குச் சந்தோஷத்தையும் கருதுவதாகும் என்பதே.

### யேசுசபை அதிசிரேஷ்டசுவாமியார்

யேசுசபை அதிசிரேஷ்டரான வண. ஜோண் பப்ரீஸ்ற் ஜான்சென்ஸ்சுவாமியார் அச்சபையிலே தாம்உட்பட்ட 50-ம் வருட பொன்யூபிலிவிழாவைச் சென்ற 23-ந் திகதியன்று கொண்டாடினர். திருச்சபையின் மகாப்பெரியசந்நியாசசபைஅதிசிரேஷ்டரான 67 வயதுடைய சுவாமியவர்கள் தமதுசபையின் முப்பதாவது பொதுச்சங்கம் ரோமாபுரியில் கூடியிருக்கும் இச்சந்தர்ப்பத்திலே தமது பொன்யூபிலிவிழாவைக் கண்டுகளிக்கும் அதிர்ஷ்டத்தைப் பெற்றுக்கொள்ளலாயினர். அன்றுதினம் உலகமுழுவதிலுமுள்ள யேசுசபைக்குருமார் தங்கள் அதிசிரேஷ்டருக்காக விசேஷசெபங்கள்செய்து ஒப்புக்கொடுக்கலாயினர். யூபிலிநாயகரான வண. ஜான்சென்ஸ் சுவாமியார் 1946-ம்ஆண்டுயேசுசபை அதிசிரேஷ்டராகத் தெரியப்பெற்ருர். இவர் 1889-ம்ஆண்டு மார்கழிமாதம் 22-ந் திகதியன்று பெல்ஜியதேச மலேன்ஸ் நகரில் பிறந்தார். 1907-ம்ஆண்டு புரட்டாசிமாதம் 23-ந் திகதியன்று யேசுசபையில் உட்பட்டார். சுவாமியார் தலைசிறந்த தமதுநிர்வாகத் திறமைகாரணமாகப் பெரிதும் பிரஸ்தாபம்பெற்றவர். இவரது தலைமையிலே யேசுசபை மகத்தானவளர்ச்சி அடைந்திருக்கின்றது. இவர் அதிசிரேஷ்டராகத் தெரியப்பெற்றதுமுதல் யேசுசபையாரின்தொகை 5,000 பேருக்குமேற்பட்டோரால் அதிகரித்துள்ளது. சுவாமியார் ருஷிய பாஷை உட்படப் பதினெரு பாஷைகளைப் பேசக்கூடிய ஆற்றல்வாய்ந்தவர்.

### பஸ்சாரதியின் குருபதவி

நியூயோக்நகரின் துணைமேற்றிராணியாரான யோசெவ் பெர்னிக்கோன்ஆண்டவராலே சமீபத்தில் குருத்துவாபிஷேகஞ் செய்யப்பெற்றவரும் 42 வயதுடையவருமான வண. ஜோண் யோசெவ் பினெகன்சுவாமியார் தமதுசீவியத்திலே நெடுநாட்படக் கொண்டிருந்த ஆசையை அன்றுதினம் பூர்த்திசெய்யலாயினர். புதியகுருவானவர் நான்கு வருடகாலம் அமெரிக்கவரசின் ஆகாயப்படையில் சேவைசெய்தவர். குருத்துவபதவியை அடைந்துகொள்வதற்காகத் தமதுகல்விப்போராட்டத்தைத் தொடக்குமுன் ஐந்துவருடகாலம் நியூயோக்நகர சேர்பஸ்போக்குவரத்துக் கம்பெனியில் ஓர்பஸ்சாரதியாகச் சேவைசெய்தவர்.

### பாப்பரசரும் கருதினலும்

இற்றைக்கு 25 வருடங்களின் முன்பரிசுத்தபாப்பரசர்கருதிஞல் பச்செல்லியென அறியப்பெற்றிருந்தபோது அமெரிக்க வாலிப குருவானவர் ஒருவரை மேற்றிராணியாராக அபிஷேகஞ்செய்துவைத்தார். சில தினங்களின் முன் அதேகுருவானவருக்கு—தற்போது நியூயோக்நகர் அதிமேற்றிராணியாராய்விளங்கும் கருதிஞல் யோசெவ் ஸ்பெல்மன் ஆண்டவருக்கு அவரதுமேற்றிராணித்துவ வெள்ளியூபிலி விழாவின் போது தமது சோபனவாழ்த்துகளும், நல்லாசிகளும் அடங்கிய திருமுகம்ஒன்றைஅனுப்பிவைக்கலாயினர்.

### பாப்பரசரும் குருத்துவமாணவரும்

"கத்தோலிக்க குருத்துவமானது உள்ளபடியே திருச்சபையின் மகாப்புனிதமான மகிமைபெருமைகளில் ஒன்ருகும்; அதன் பரிசுத்தத்துக்கு மகாவிசேஷப்பட்ட அறிகுறிகளில்ஒன்ருகும்" என்று பரிசுத்தபாப்பரசர் காஸ்தெல் கான்டல்போவிலுள்ள தமது வேனிற்கால மாளிகையில் அன்று பேட்டியளித்த 3,500 பிரான்சிய குருத்துவமாணவர்களுக்குக் கூறலாயினர். "மானிடருக்குத்தேவனைஅருளுவதும், மானிடரைத் தேவனுக்கு அருளுவதும் விசேஷவரப்பிரசாதமில்லாது அடையமுடியாத அத்துணை உந்நதமான ஓர்பதவியாகும்; என்றைக்கும்போலவே இன்றும் மிக மேலாக மானிடர் வேண்டிநிற்பதென்ன? சரித்திரபூர்வமாகத் திருவருளால் வெளியிடப்பட்டிருப்பதுபோல் தேவனை — உண்மையானதேவனை அறிவதும், நேசிப்பதுமே" என்று பரிசுத்த பிதா மேலும்கூறிநின்ருர். பிரான்சிலுள்ள சின்னக்குருமடங்களிலிருந்துபோன இந்தக்குருத்துவ மாணவர்கள் தங்களது இளங்குருத்துவமாணவர் இயக்கத்தின் பத்தாம்ஆண்டுவிழா ஞாபகார்த்தமாக ரோமாபுரிக்கு யாத்திரை செய்திருந்தார்கள்.

### மனந்திரும்பிய பிரிவினைக்குரவர்

மலையாளத்திலே ஜக்கோபித்த பிரிவினைச்சபையைச் சேர்ந்தவரான வண. ஏபிரகாம் சுவாமியார் மனந்திரும்பி அப்பிரிவினைச்சபையினின்றும்விலகிக் கத்தோலிக்க திருச்சபையில் சேர்ந்திருக்கின்ருர். இவர் சென்னைக் கிறிஸ்ரியன் கல்லூரியில் படித்து மிகுந்த கண்ணியத்துடன் எம். ஏ. பட்டம்பெற்றவர். கல்கத்தாவிலுள்ள சிறும்பூர் கல்லூரியில் பி. டி. பட்டம்பெற்றவர். ஒக்ஸ்போட் சர்வகலாசாலையில் பி. லிற். எனப்படும் இலக்கியபண்டித பட்டம் பெற்றவர். 1955-ம் ஆண்டு இங்கிலாந்திலிருந்து திரும்பியதும் ஆல்வேயிலுள்ள யூனியன் கிறிஸ்ரியன்கல்லூரியில் ஓர்பேராசிரியராக இருந்துவந்தார். சென்ற கோடைகால விடுமுறையின்போது இவர் தமதுபேராசிரியர் பதவியை இராசிநாமாச்செய்துவிட்டுக் கத்தோலிக்க திருச்சபையுடன் ஐக்கியப்படலாயினர். தற்போது இவர் ஏர்ணுக்குள அதிமேற்றிராசனத்தைச்சேர்ந்த நிர்மலா கல்லூரியில் ஓர்பேராசிய ராகக் கடமையாற்றி வருகிருர்.

# நூற்ருண்டுவிழா யாத்திரிகர்கள்

லூர்துதிருப்பதியிலே பரிசுத்த தேவதாயார் அர்ச். பேர்னதெத் அம்மாளுக்குக் காட்சியருளிய நூரும்ஆண்டாகிய அடுத்தவருடத்திலே அப்பதியை 50லட்சம் யாத்திரிகர்கள் தரிசிப்பார்களென முந்தஎதிர்பார்க்கப்பட்டது. அத்திருசேத்திரத்தை 70லட்சம் யாத்திரிகர்கள் தரிசிப்பார்களெனப் பிந்தத் தெரிவிக்கப்பட்டது. ஆனல், இப்போதோ இந்தயாத்திரிகர்களின் தொகை ஒருகோடி பேரென மதிப்பிடப்படுகிறது. இது 16,000 மக்களை மாத்திரமே அடக்கியுள்ள ஓர் பட்டினத்தில் அங்கு வசிப்பார் ஒவ்வொருவருக்கும் 625 யாத்திரிகர்கள் விகிதமாகும். இத்தொகை அதிகம் மிதமிஞ்சியதாக மாட்டாதென அப்பதிமக்கள் திடமாக நம்புகின்ருர்கள்.

ஏனெனில், சாதாரணவருடம் ஒன்றிலே அவர்கள் சராசரியாக 30லட்சம் யாத்திரிகர்களுக்கு உணவும், இல்லிடமும் அளித்துவருகின்ருர்கள். அடுத்தவருட யாத்திரைகாலம் அர்ச். பேர்னதெத் அம்மாள் தேவதாயாரின் முதலாவது காட்சிபெற்ற தினமாகிய மாசிமாதம் 11-ந் திகதியிலிருந்து அவ்வருட இறுதிவரையிலே நீடித்திருக்கும். இந்த நூற்ருண்டு விழாவையிட்டு அங்கே நிலத்தின் கீழ் உலகில் மிகப்பிரமாண்டமானதாய் மகாதேவாலயம் ஒன்று தீவிரமாகக் கட்டியெழுப்பப்பட்டு வருகிறது. பட்டினத்தின் மத்தியிலே தபாற்கந்தோர்ஒன்று புதிதாகத் திறக்கப்படவிருக்கிறது. விருந்தினரை வரவேற்குஞ்சாலைகள் நவமாக அமைக்கப்படுகின்றன. ஹொட்டல்கள், விடுதிச்சாலைகள்அநேகம் புதியசிறகுகளுடன் விசாலமாக்கப்பட்டுவருகின்றன. பட்டினத்தின் 34 மைல் நீளமான சகலவீதிகளும் புதிதாகக் கற்கள்பதித்துச் செப்பனிடப்பட்டிருக்கின்றன. வெளிச்சமேற்றும் புதியதிட்டம்ஒன்று சித்தஞ் செய்யப்பட்டிருக்கிறது. திருசேத்திரத்தைநோக்கித் திறக்கப்பட்டுள்ள நேர் வீதி ஒன்று போக்குவரத்து நெருக்கடியைத் தடுக்கக் கூடியதாயிருக்கிறது.

பிரித்தானிய ஆகாயப்பிரயாண விமானக் கம்பெனிகள் வருடந்தோறும் சாதாரணமாக அத்திருப்பதிக்குப் 18,000 யாத்திரிகர்களை விமானங்களில் ஏற்றியிறக்குகின்றன. ஆனல், அடுத்த வருடத்திலே 70,000 யாத்திரிகர்களை ஏற்றியிறக்க ஆயத்தப்படுகின்றன. "எர் லிங்குஸ்" என்ற கம்பெனிமாத்திரம் தனது டபிளின்-லூர்து ஆகாயப்பிரயாண பாதையில் ஏற்கனவே 20,000 யாத்திரிகர்களுக்குப் பிரத்தியேக இடவசதிகளைச் செய்துள்ளது. ஆயிரம் விசேஷ றெயின்வண்டிகள் ஒழுங்குசெய்யப்பட்டிருக்கின்றன. போஸ்ற்காட்டுகள்அனுப்பிவைப்பதில் லூர்துபதி ஏற்கனவே பிரான்சில் முதன்மைஸ்தானம்வகித்துவிளங்குகின்றது. மரியாயின் புனிதவருடத்தில் அத்திருப்பதியிலிருந்து 80 லட்சம் போஸ்ற்காட்டுகள் அனுப்பிவைக்கப்படலாயின. ஆனல், அடுத்தவருடத்திலே இத்தொகை 2 கோடியாக அதிகரிக்குமென்று பிரான்சிய தபால் அதிகாரிகள் எதிர்பார்க்கின்ருர்கள். அர்ச். பத்தாம் பத்திநாதரின் முக்கியமான திருப்பண்டம்ஒன்றை லூர்துபதியிலே அவர்பேரால் கட்டியெழுப்பப்பட்டுவரும் மகா தேவாலயத்துக்கு அனுப்பி வைக்கும்படியாகப் பரிசுத்த பாப்பரசர் ஆஞ்ஞாபித்திருக்கின்ருர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## புரட்டாசி மாதம்

**பரிசுத்த வியாகுலமாதாவுக்கு ஒப்புக்கொடுக்கப்பட்ட மாதம்**

**பொதுக்கருத்து:** தேசஅதிகாரிகள் பொதுநலப்பிரச்சினைகளில் தங்களுக்குள்ளே உண்மையோடும், நீதியோடும் நடந்துகொள்வதற்காக வேண்டிக்கொள்வது.

**வேதபோதககருத்து:** இந்திய சர்வகலாசாலை மாணவர்களுக்காக மன்ருடிக்கொள்வது.


# சத்தியவேத பாதுகாவலன்

**1957-ம் ஆண்டு புரட்டாசி மாதம் 26-ந் திகதி**


## ஹங்கேரிய பிரச்சினை

சோவியற்ருஷியாவிலோ, செஞ்சீனவிலோ, அன்றேல் கம்யூனிஸ்தஆட்சி நடைபெற்றுவரும் ஏனையநாடுகளிலோ மக்கள்சுதந்திரமென்பது மருந்துக்குத்தானும்கிட்டாத ஓர்காரியமாகும். ருஷிய இரும்புத்திரையும், செஞ்சீன மூங்கில்திரையும் மெதுவாக நீக்கப்பட்டுவரும் இக்காலத்திலே அந்நாடுகளில் இதுவரை திரைமறைவில் இருந்துவந்த பரமஇரகசியங்கள்பல ஒன்ருென்ருகப் பகிரங்கத்துக்கு வந்துகொண்டிருக்கின்றன. இற்றைக்குப் பத்துமாதங்களின்முன் ஹங்கேரியமக்கள் சுதந்திரவேட்கை கொண்டு அரசியற்புரட்சிக் கலகஞ்செய்தபோது, சோவியற் படைகள் தங்கள் இராணுவபலத்தைக்கொண்டு அவர்களைக் குரூரத்தனமாகக் கொன்றுகுவித்துக் கலகத்தைஅடக்கிய சம்பவமானது, அவைகளின் கொடுமைகளுக்காற்ருது தங்கள் சுவநாட்டினின்றும் பல்லாயிரக்கணக்கிலே தப்பியோடிப் பிறநாடுகளில் அடைக்கலம்புகுந்துள்ள ஹங்கேரியமக்கள்மூலம் பயங்கரகாட்டுத்தீபோன்று அகிலமுழுவதுமே பரந்து சுதந்திரநாடுகளைத் திகில்கொள்ளச் செய்துவிடலாயிற்று. ஹங்கேரிய சுதந்திரஎழுச்சியிலே சோவியற் படைகள் நடந்துகொண்ட மிருகத்தனமானமுறையை ருஷியமக்கள்தானும் துவேஷிக்கிருர்களென அங்குசென்றுதிரும்பியவர்கள் தெரிவித்திருப்பது ஆச்சரியமாகாது. சுதந்திரத்திற்காகப் போராடிய ஹங்கேரியமாணவர்கள் இருவரே சமீபத்தில் இலங்கைக்கு வந்து ஹங்கேரியமக்களது சுதந்திரஎழுச்சியின்போது சோவியற் படைகள் செய்தநட்டணைகளைப் பகிரங்கமாக எடுத்துக்காட்டிச் சுதந்திரஅக்கினி ஹங்கேரியமக்களின் இதயங்களிலே சுடர்விட்டுச் சுவாலித்து எரிந்துகொண்டிருப்பதாகத் தெரிவித்துப் போயிருக்கின்ருர்கள். ஹங்கேரிய அரசியற்புரட்சிக் கலகத்தின் விளைவாக — அதில் ருஷியா தலையிட்டுச் செய்துள்ள பயங்கரஅட்டூழியங்களின் விளைவாகச் சுதந்திரநாடுகள் மாத்திரமல்ல, கம்யூனிஸ்த ஆட்சியின்கீழ் அடிமைப்பட்டுக்கிடக்கும்நாடுகளுமே திகில்கொள்ளலாயின. அம்மட்டா! அகில முழுவதிலுமுள்ள கம்யூனிஸ்த கட்சிகளிடையேதானும் புரட்சிகரமான ஓர்மாற்றம் ஏற்படலாயிற்று. பலநாடுகளிலும், விசேஷமாய் மேற்குஐரோப்பிய நாடுகளிலும் கம்யூனிஸ்த கட்சிகள்சில தனது அங்கத்தவர்களில் நூற்றுக்கு 25விகிதமானேரை இழந்துபோய்விட்டன. ஹங்கேரியில்நிகழ்ந்த அட்டூழியங்களால் இத்தாலியிலே கம்யூனிஸ்ததலைவர் தொகிளியற்றிக்கும், அவரது தோழர்களுக்குமிடையே உண்டான பெருங்குழப்பங்காரணமாக அவரின்செல்வாக்கு மட்டந்தட்டிவிடப்படலாயிற்று. இன்று ஹங்கேரியபிரச்சினையே உலகில் பெரும்பிரச்சினையாகி விட்டது. நியூயோர்க்நகரில் தற்போதுகூடியிருக்கும் ஐக்கியநாடுகள்பொதுச்சபையின் நிகழ்ச்சிநிரலிலிருந்து ஹங்கேரிய பிரச்சினைபற்றிய விவாதத்தை நீக்கிவிடுமாறு ருஷியா எடுத்துக்கொண்டமுயற்சி படுதோல்வியடைந்துள்ளது. இந்தப் பிரச்சினைபற்றித் தற்போதுகூடியிருக்கும் சபைக்கூட்டத்தில் தானே பிந்தவிவாதிப்பதென்று ஐக்கியநாடுகளின் பொதுச்சபை சென்றதிங்கட்கிழமை பெருவாரியானவாக்குகளால் — அதாவது 47அதிகப்படியான வாக்குகளால் தீர்மானித்துள்ளது. இந்தப்பிரச்சினைவிஷயமாய் ருஷியா இந்த விதமாக எதிர்த்துநிற்கவேண்டிய காரணமென்ன? தனது திருவிளையாடலெல்லாம் அம்பலத்துக்குவரப்போகிறதேயென அஞ்சுகின்றதா? இன்றேல் முதுகிலே புண்ணுமில்லை, காடுநுழையப் பயமுமில்லையென்று வாளாவிருந்துவிடலாமே. கம்யூனிஸ்த புரட்சி உண்டானதுமுதல் ருஷியாவிலோ, சீனவிலோ, அன்றேல் பிறநாடுகளிலோ இறந்துபட்ட மக்கள்தொகையை — கெட்டொழிந்துபோன மக்கள்தொகையை — நிட்டூரவேதனை, இல்லை, நிட்டூரமரணவேதனைக்குள்ளாய் மாண்டுமடிந்த — மடிந்துகொண்டிருக்கின்ற மன்னுயிர்களின்தொகையை — கட்டைமண்ணும், குட்டிச்சுவருமான நாடுகள், நகரங்கள், கிராமங்களின்தொகையைக் கணிக்கவியலுமா? ஆனல், ஒன்று. எய்தவனிருக்க அம்பை நோவதிற் பயனில்லை. தன்னைப்படைத்தவரை மறந்தஉலகை — பாவாக்கிரமங்களாலே பாழடைந்துகொண்டுவரும் இந்தப்பாருலகைத் தண்டிக்கும் ஓர்கருவியாகவே ருஷியாவைக் கடவுள் தெரிந்துள்ளார் என்பது பாத்திமாகாட்சிகளின்போது வெளிவந்த ஓர்இரகசியமாகும். அதனல், ருஷியாமனந்திரும்புமாறு மனம்வைத்துநாம் மன்ருடுவோம். திவ்வியபூசைமுடிவில் சொல்லப்பட்டுவரும் மூன்றுபிரியதத்தமந்திர முதலாம் செபங்களை முழுமனதுடன் சொல்லிவருவோம். விசேஷமாய்ச் செபமாலைமாதத்திலே — வருகிறஐப்பசிமாதத்திலே அதேகருத்துக்காகத் தினமும் பக்தியுருக்கத்துடன் செபமாலை சொல்லிவருவோம். அவ்வாறுசெய்து வருவோமாயின் ருஷியாவிலே ஓர் நல்லதிருப்பத்தைக் கண்டுகொள்ளும் அதிர்ஷ்டத்தைப்பெறுவோமென்பது நிச்சயம்.



**சதாசகாயமாதா கோணம்**

## காணுமற்போன கழலை

சதாசகாயமாதாவே! என் அன்பான ஆச்சி! நான் ஓர் இந்துசமயத்தவன் என்ருலும் உம்மில் எனக்கு அபார நம்பிக்கையும், பத்தியும், நேசமும் உண்டு. உமதுபோல் நடைபெறும் நோவனைப்பத்தி முயற்சியிலே ஒருமுறையுந்தவருமல 24 கிழமைகளாகத் தொடர்ச்சியாய்ப் பங்குபற்றி வருகின்றேன் என்பது உமக்குத்தெரியும். இந்தக் காலஎல்லையுள் நான்கேட்டுக்கொண்ட வரங்களும், நீர் தாச்சித்தந்கொண்ட நன்மைகளும் அநேகம். இவற்றிற்கெல்லாம் நன்றியாகவும், உமக்குத் துதிசெலுத்தவும் ஒருகிழமையாவது தவறவிடாது உமது சந்நிதானத்துக்கு ஆசைஆவலோடு ஓடிவர நான்பின்நின்றவன் அல்ல.

உமதுநோவனைப் பத்திமுயற்சிக்குச் சோனவாரிமழையிலும் வந்திருக்கின்றேன். வேலைத்தலத்தில் வேலைப்பாரத்தையுஞ் சட்டைபண்ணுது தருணதருணங்களில் ஒருமணித்தியால லீவுபெற்றுக்கொண்டும் வந்திருக்கிறேன். இவற்றிற்கு ஏற்றசம்பாவனையைத் தாயே! நீர் எனக்குத் தந்திருக்கிறீர்.

நீர் எனக்குஅளித்துள்ள சலுகைகளில் அதிகம்பெரியது, அதிகம்முக்கியமானது உண்மையாகவே ஒருபுதுமை. இதை என் ஆயுள்உள்ளவரையும் மறக்க முடியாது. அதைப்பற்றி விசேஷமாகக் குறிப்பிட விரும்புகிறேன்.

எனது தொண்டை சிலகாலமாக வருத்தங்கொடுத்துக்கொண்டிருந்தது. அதில் ஏதோகோளம் அதிதீவிரமாக வளர்ந்து பருத்து வெளிப்புறத்தில் கழலைபோலத் தோன்றியது. நான்பல வைத்தியரிடம் காட்டினேன். அவர்கள் ''தைரொயிட்''கோளம் பெருத்துவிட்டதென்றும், அதற்குஉடனே சத்திரவைத்தியம் செய்யாதுவிட்டால் பெரியஆபத்தாய் முடியுமென்றும் ஒருவாய்ப்படச்சொல்லிவிட்டார்கள். அதனல் வெகுவாக நான் கிலேசப்பட்டாலும் சத்திரவைத்திய சிகிச்சைபெற முற்ருய்மறுத்துவிட்டேன். உம்மிடம் எனக்குள்ள நம்பிக்கைபெரிது. ஒருபுதன்கிழமைஉம்மிடம்வந்து, ''தாயே! சத்திரவைத்தியமில்லாமல் என் நோயைத்தீரும்; என் தொண்டையில் வைத்தியரைக் கத்திவைக்கவிட எனக்கு மனமேயில்லை; எனக்கோ மிகவும் பயமாகஇருக்கிறது; எனக்கு எத்தனையோ நன்மைகளைச் செய்திருக்கிறீர்; என்மீது உம்முடையஇரக்கத்தை இம்முறையும் காட்டியருளும்'' என்று கெஞ்சி மன்ருடினேன். என் ஆச்சி! எனக்குநீர் பெரியபுதுமை செய்துவிட்டீர். நாலுகிழமைகளுக்குள் ஒருவித மருந்துமேயில்லாது படிப்படியாகக் குறைந்து இருந்தஇடமே தெரியாது கழலை மறைந்துவிட்டது.

இந்தக்கழலையை—திரட்சியை அவதானித்திருந்த என்நண்பர்பலர் கழலையைக் காணுமேயென்று என்னைக் கேட்டார்கள். நான் சத்திரவைத்தியம் செய்யவில்லை; செய்திருந்தால் நீங்கள் அறிந்திருப்பீர்கள்தானே; எப்படித் திரட்சியில்லாமற்போயிற்று என்று அறியவிரும்பினல் சதாசகாயமாதாவிடங் கேட்டறியுங்கள்என்று சொல்லிவிட்டேன்.

தாயாரே! மாதாவே! ஆண்டவளே! உம்மை நமஸ்கரிக்கிறேன், கத்தோலிக்கருக்கும், கத்தோலிக்கர் அல்லாதோர்க்கும் உமதுவல்லபத்தைப் புகழுகிறேன். உம்மை ஒருபோதும் மறக்க மாட்டேன். என்னை இப்போதும், எப்போதும் ஆண்டுகொள்ளும்.

"தஞ்சம்நீரென வந்தோர்தம்மைத்
தள்ளத் தானறியீராமே
மிஞ்சும்வல்லமை மேவுந்தாயே
வேருேரோதுணை நீர்தாமே".

(மருதானையில்வசிக்கும் திரு. A. R. "நோவனைப்புதினம்" எனும் ஆங்கில பத்திரிகைக்கு எழுதியனுப்பிய நன்றித் துதியின் தமிழ்ச்சாரம்)

---

### நன்றியறிந்த ஸ்தோத்திரம்

சதாசகாயமாதாவே! தயாளம் நிறைந்த அன்னையே! எனது சீவியம் முழுவதும் என்னை வாட்டிவந்த ஓயாத தலைவலியை எத்தனையோ வைத்தியர்களாலும் தீர்க்கமுடியாமல் போய்விட்டது. ஈற்றில் தங்கள் அடைக்கலம் அண்டினேன். பூரணசுகம் கிடைத்தது தங்கள் நாமம்என்றும் புகழப்படுவதாக.

**Ampitiya** **Mrs. Joseph**

---

### வெங்காயமும் வழுக்கைத்தலையும்

ஆஸ்திறேலியாவிலே அடலெயிட் நகரில் வசித்துவருகிறவரான பெங்கில்லிஎன்பவர் இதுவரை தெரியவராதிருந்த ஓர்விஷயத்தைக் கண்டுபிடித்திருக்கின்ருர். அதாவது வழுக்கைத்தலையுடையஅவருக்குத் தன்தலையிலிருந்து தொப்பியைஎடுத்தால் கொஞ்சமயிராவது அதில் இருக்கவேண்டுமென்பதுதான் அவரதுஆவல். இதற்காக அவர் பட்டபாடு கொஞ்சமல்ல, அவரும்உபயோகியாத மருந்துகளேயில்லை. ஈற்றில் எங்குமேகிடைப்பதாகிய எளியவெங்காயத்தை எடுத்துக் காலையிலும், இரவிலும் கருத்தாகத் தனதுவழுக்கைத்தலையில் தடவிவந்தார். அதன்பயனக அவருடைய வழுக்கைத்தலையில் மயிர் முளைக்கத் தொடங்கியது. இரண்டுமாதங்களில் அடர்த்தியாக வளர்ந்துவிட்டது. இதிலிருந்துவிஞ்ஞானிகள் இப்போதுவெங்காயத்தை ஆராய்ச்சிசெய்து, பெரிய வெங்காயத்தைப் பொறுமையுடன் அதிகாலையிலும், இரவிலும் பத்து நிமிஷம் வழுக்கைத்தலையில் தேய்த்துவந்தால் மயிர்முளைத்துவிடுகிறதென்று அனுபவத்தில் கண்டறிந்திருக்கிருர்கள்.

* * *

● பிரபல சோவியற்ருஷிய விமான விஞ்ஞானியாகிய அன்ட்றி டியூப்போலேவ்என்பவர் 180 பிரயாணிகளை ஏற்றிக்கொண்டு மணித்தியாலம் 550மைல் வேகத்தில் பறக்கக்கூடிய புதியஇனமான விமானம்ஒன்றைக் கட்டியிருக்கின்ருராம், "ருஸியா"என அறியப்படுகின்ற இந்த விமானம் மஸ்கோவிலிருந்து நியூயோர்க்நகருக்கு இடையிலேதரியாமல் ஓரேமூச்சில் பறந்துபோகக்கூடியதாம்.

● "தேவபராமரிக்கையின் குமாரர்கள்"என்ற குருமார்சபையின் அதிசிரேஷ்டரான வண. கார்லோ பென்சா சுவாமியார், போலாந்திலே தமதுசபையைச்சேர்ந்த எட்டுக்குருத்துவமாணவரின் குருத்துவாபிஷேகத்திற்குச் சமூகமளிக்குமாறு மிலான்நகரிலிருந்து சமீபத்திலே அங்குவிமானமூலம் செல்லலாயினர். போலாந்திலே கம்யூனிஸ்தர்கள் அதிகாரத்துக்குவந்தபின் அங்கு செல்ல அனுமதிக்கப்பட்ட ஒருசபையின் முதலாவது அதிசிரேஷ்டர் இவராவர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சுதேச வர்த்தமானம்

## மூன்றுமொழிகளிலும் விளம்பரம்

மோட்டர்ப் போக்குவரத்துப் பகுதியின் விளம்பரங்கள் அரசாங்கசெசத்திலே மந்திரியால் பிரசுரிக்கப்படும்போது அவைகள் தமிழ், சிங்கள, ஆங்கில தினசரிப்பத்திரிகைகளிலும் பிரசுரிக்கப்படவேண்டுமென மோட்டர்ப் போக்குவரத்துச்சட்டத்தின் 19(1)பிரிவின்கீழ் கூறப்பட்டிருக்கிறது.

## பத்தாவதுஆண்டு விழா

இலங்கைப் பாராளுமன்றத்தின் பத்தாவதுஆண்டு நிறைவுவிழா வருகிற ஐப்பசிமாதம் 14-ந்திகதி கொண்டாடப்படவிருக்கிறது. இந்தவிழாவின் ஞாபகார்த்தமாக அரசாங்கம் பாரியதோர் காணித்திட்டத்தையும், உணவு உற்பத்தித்திட்டத்தையும் ஆரம்பித்துவைக்க வேண்டுமென்று சபாநாயகருக்குப் பிரதமர் யோசனைகூறியிருக்கின்றார்.

## இளம்பிள்ளைவாத மருந்து

இளம்பிள்ளைவாதத்தைத் தடுக்கும் புதிய "சோக்" பால்மருந்தைச் சுகாதார சேவைப்பகுதி தற்போது தருவித்திருக்கிறது. இங்கிலாந்தில் தயாரிக்கப்பட்ட இந்தமருந்து நாட்டின் பல்வேறுபாகங்களிலிருந்தும் தெரிந்தெடுக்கப்பட்ட 300 பிள்ளைகளிலே பரீட்சித்துப்பார்க்கப்படுமென்றும், பிறகுதான் அது பொதுப்பாவனைக்கு வழங்கப்படுமென்றும் சுகாதாரசேவை உபதலைவர் தெரிவித்திருக்கின்றார்.

## பொலிஸ்தலைவரின்விஜயம்

பொலிஸ் இன்ஸ்பெக்றர் - ஜெனறலான திரு. ஒஸ்மன்ட் டிசில்வா வருகிற ஐப்பசிமாதம் 5-ந்திகதிவரையில் யாழ்ப்பாணப்பகுதிக்கு விஜயஞ்செய்யவிருக்கிறாரெனத் தெரியவருகிறது. அவர் 7-ந்திகதியன்று யாழ்ப்பாணமுற்றவெளியில் நடைபெறவிருக்கும் பொலிஸ்விளையாட்டுப்போட்டிகளுக்கும், கிராமமுன்னேற்றசங்கங்களுக்குரிய வெற்றிக்கேடயங்கள் வழங்கும் விழாவிற்கும் சமுகமளிக்கவிருக்கின்றார்.

## நகரசபையின் வேண்டுகோள்

உதவிபெறும் பாடசாலைகளை அரசாங்கம்ஏற்றுநடத்தவேண்டுமென்ற யோசனைக்கு ஆட்சேபனைதெரிவிக்கும் பிரேரணைஒன்று சென்றதி[ங்கட்]கிழமை யாழ்ப்பாண நகரசபைக்கூட்டத்தில் நிறைவேறியுள்ளது "எங்கள்சமயங்களுக்கேற்ற சரியானசூழ்நிலையில் எங்கள்பிள்ளைகளுக்குக் கலவிகற்பிப்பது எங்கள்கடமையென்று நாங்கள்கருதுவதாலும், சிறந்தபாடசாலைகள் எவையென்று நாங்கள்கருதுகிறோமோ அப்பாடசாலைகளில் எங்கள்பிள்ளைகளைச் சேர்த்துக் கற்பிக்கும்உரிமை பெற்றோராகிய எங்களுக்கு இருக்க வேண்டியதாலும் உதவிபெறும் பாடசாலைகளை அரசாங்கபாடசாலைகளாக மாற்றும் யோசனையையிட்டு இச்சபை கவலைப்படுகின்றது; ஆகவே, இந்தயோசனையைக் கைவிடுமாறு இச்சபை கல்விமந்திரியைக் கேட்டுக்கொள்ளுகிறது" என்றபிரேரணையைத் திரு. ஜே. எஸ். நிக்கலஸ்அவர்கள் கொண்டுவந்தார். திரு. சி. முத்துத்தம்பிஅவர்கள் இதனை ஆதரித்துப் பேசியபோது, "அரசாங்கம் எதுவென்று எங்களுக்குத் தெரியும்; சிறுபான்மையினரென்ற தோரணையிலே அரசாங்கத்தில் எங்களுக்கு இடமில்லை; எங்கள்பாடசாலைகளை அரசாங்கம்ஏற்றுநடத்த நாங்கள் அனுமதித்தால் அது ஆபத்தாகவேயிருக்கும்; எங்கள்பாடசாலைகளைப் பிக்குகள் கையில் ஒப்படைப்பதாகவே அது முடியு"மெனக் கூறினின்றார். அப்போது கம்யூனிஸ்தர்கள் சமய விரோதிகளெனக்கூறுவது தவறென்று திரு. எம் கார்த்திகேசன் கூறினாராம். ஏன் இவர் ஓர் கம்யூனிஸ்தரா?

## 435 மொத்த வியாபாரிகள்

அடுத்துநிகழும் 1958-ம் ஆண்டு தைமாதமுதல் சீனி, அரிசி, மாவியாபாரத்தை நிறுத்திவிடவேண்டுமென்று இலங்கையிலுள்ள 435 மொத்தவியாபாரிகளை அரசாங்கஉணவுப்பகுதி கேட்டுக்கொள்ளவிருக்கிறது. அம்மூன்றினதும்வியாபாரத்தை வருங்காலத்தில் கூட்டுறவுச்சங்கங்களே நடத்தவேண்டுமென்று உணவுமந்திரி தீர்மானித்திருக்கின்றார். அதனால் மொத்தவியாபாரிகளுக்கு இதுபற்றிய அறிவித்தல்கள் உடனடியாக அனுப்பப்படவிருக்கின்றன.

## விதானைமாரின் நியமனம்

விதானைமாரை நியமனஞ்செய்வதில் மாகாணதலைவர்களுக்கு இருந்துவரும் அதிகாரத்தை முற்றாகநீக்கிவிட உள்நாட்டுமந்திரி காரியாலயம் நிச்சயித்திருப்பதாகச் சொல்லப்படுகிறது. இனிமேல் இந்தநியமனங்கள் உள்நாட்டுமந்திரி காரியாலயத்தினை நிரந்தரகாரியதரிசியால் செய்யப்படுமாம். முன்னரும் கொள்கையளவில் இந்தக்காரியாலயமே சகலவிதானைமாரையும் நியமனஞ்செய்ததாயினும் நடைமுறையில் அவ்வாறு அது நடக்கவில்லை. ஆனால், இனிமேல் இந்தநியமனமுறை முற்றாகத் திருத்தியமைக்கப்பட வேண்டுமென்று உள்நாட்டுமந்திரி உறுதிகொண்டிருப்பதாகவும், தனது கண்காணிப்பிலேயே சகலநியமனங்களும் நடைபெறவேண்டுமென்று அவர்முடிவுசெய்திருப்பதாகவும் தெரியவருகின்றது.

## புகையிலைஒப்பந்தம் நடைபெறுமா?

சென்றமாதத்திலே காலஎல்லை முடிவடைந்துள்ள இந்திய - இலங்கைப் புகையிலைஒப்பந்தத்தை இலங்கை அரசாங்கம் புதுப்பிக்கமாட்டாதெனத் தெரியவருகிறது. அல்லவென்று அதனைப் புதுப்பிக்குமிடத்து உள்நாட்டுப் புகையிலைக் கைத்தொழில்களைப் பாதிக்காதவகையில்தான் புதிய ஒப்பந்தம் செய்யப்படுமெனச் சென்றவெள்ளிக்கிழமை கொழும்பிலே அரசாங்க அதிகாரிகளுக்கும், புகையிலைச்செய்கைகாரருக்குமிடையேநடைபெற்ற மகாநாடு ஒன்றில் உறுதிகூறப்பட்டிருக்கிறது. இதற்குக்காரணம் பீடிப் புகையிலைக் கைத்தொழிலைப் பாதுகாப்பதேயாம். இந்தியாவிலிருந்து பீடிப் புகையிலை இறக்குமதிநிறுத்தப்படின் அரசாங்கம் வருடந்தோறும் சுமார் 1 கோடியே 20 லட்சம்ரூபாமிச்சம்பிடிக்கலாமென்றும், பீடிக்கைத்தொழிலில் சுமார் நாற்பதினாயிரமபேருக்கு வேலைகொடுக்கமுடியுமென்றும், சகலவசதிகளும் கிடைக்குமிட[த்து] இலங்கையின்பீடித் தேவையை மூன்றுவருடகாலத்தில் பூர்த்திசெய்யமுடியுமென்றும் சொல்லப்படுகிறது.

## பாகிஸ்தான் ஹை கம்மிஷனர்

இலங்கையிலே பாகிஸ்தான் ஹைகம்மிஷனராய் இருந்துவருகிறவரான நவாப் சித்தீக் அலிகானும், அவர்பாரியாரும் சென்றவார இறுதியில் யாழ்ப்பாணத்துக்கு விஜயஞ்செய்தார்கள். சென்ற திங்கட்கிழமைமாலை யாழ்ப்பாண நகரமண்டபத்திலே யாழ்ப்பாணமேயராலும், நகரசபைஅங்கத்தவர்களாலும் இருவருக்கும் ஓர் பொதுவரவேற்பு அளிக்கப்படலாயிற்று. மேயர் அவர்களை வரவேற்க, உதவி மேயர் ஹாஜி. வி. எம். எம். அபுசாலி ஹைகம்மிஷனருக்கு மாலைசூட்டினார். எல்லோரும் ஆசனங்களில் அமர்ந்ததும் மேயர் ஆங்கிலத்திலும், தமிழிலும் வரவேற்புப்பத்திரம்படித்துக்கொடுத்தார். அப்பத்திரம் பனையோலையில் எழுதப்பட்டு, வெள்ளிப்பேழைஒன்றினுள் வைக்கப்பட்டிருந்தது. ஹைகம்மிஷனர் அளித்த[பதிலிலே] யாழ்ப்பாணத்

## மாதா ஆசிக்கும் ரோசாமலர்

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

எங்கள்நாயகன் யேசுக்கிறீஸ்து பூங்காவனத்தில் முழங்கால்படியிட்டுச் செபித்ததைத் தியானித்துக்கொண்டு நீயும் முழந்தாட்படியிட்டுச் செபமாலை ஓது. இன்னும்அதிகமதிகம் தேவசித்தத்துக்கமைந்து நடக்கஆசிக்கிறாயா? "இதோ உம்முடைய அடிமையானவள்! உம்முடைய வார்த்தையின்படியே எனக்காகக்கடவது" எனத் தேவதாய்சொன்ன வார்த்தைகளைத் தியானித்துக்கொண்டு நீயும் தேவசித்தத்துக்கமைந்து நடப்பதற்கு வேண்டிய வரப்பிரசாதங்களுக்காக மன்றாடலாம்.

உலகத்தார்செய்கிற பரிகாசநிந்தைகளைச் சகிக்கவேண்டுமா? யேசுநாதர் பரிகாசஇராசனாக முள்முடிதரிக்கப்பட்டதைத் தியானித்துக்கொள். தாழ்மை வேண்டுமா? யேசுநாதர் மாட்டுத் தொட்டியில் பிறந்ததைத் தியானித்துக்கொள். ஆறுதல்வேண்டுமா? யேசுநாதர் சிலுவையில் மூன்றுமணிநேரம்வரை உயிரோடிருந்துகூறிய ஆறுதலானவார்த்தைகளைத் தியானித்துக்கொள். பிறர்சிநேகம் வேண்டுமா? தேவதாய் எலிசபேத்தம்மாள்வீட்டில் செய்தபணிகளைத் தியானித்துக்கொள்.

செபமாலையானது வாழ்க்கையில்ஏற்படும் எல்லாச்சந்தர்ப்பங்களுக்கும் பொருத்தமானசெபம். வாழ்க்கையில் ஏற்படும் அக்களிப்பு, வியாகுலம், ஆனந்தம்ஆதியன செபமாலையில் நாம் தியானிக்கும் களிகூர்ந்தகாரணிக்கம், வியாகுலகாரணிக்கம், மோட்சானந்தகாரணிக்கம் என்பவற்றுடன் நன்கு பொருந்தும். வாழ்க்கையில்ஏற்படும் இக்கட்டு, இடைஞ்சல், துன்பவருத்தம், பீடை, அவமானம்முதலியவற்றால் மனமடிவுற்றவர்களுக்குச் செபமாலை ஆறுதலும், தேறுதலும்கொடுக்கும் நல்லமருந்தாகும்.

செபமாலை எல்லாவேளைகளுக்கும் உகந்தசெபம். "மடிச் சிற்றாலயம்" என்று ஒருவர் செபமாலையைப் புகழ்ந்துகூறியுள்ளார். இதுஉண்மை. செபமாலையை நாங்கள்எப்போதும் கொண்டுதிரியமுடியும். பக்தியுடன் செபமாலையைக் காத்திலேந்தி ஓதும்போது நாங்கள் தேவசமுகத்தில்இருக்கிறோம்.

செபமாலையை எப்போதும் உங்களுடன் கொண்டுதிரிவீர்களென வாக்குப்பண்ணுங்கள். விட்டதொட்ட நேரங்களிலெல்லாம் இரண்டொருகாரணிக்கங்கள்ஓதுவது எவ்வளவு சுலபமான காரியம். வண்டிகளில் பிரயாணம் பண்ணும்போதும், கடைத்தெருக்களில் உலாவும்போதும், மூளைக்கு வேலையில்லாக் கைத்தொழில்கள் செய்யும்போதும், நித்திரையின்றிப் படுக்கையில் எல்லாப்பக்கமும் புரண்டுகொண்டிருக்கும்போதும் செபமாலை ஓதலாம் அல்லவா?

உன்வாழ்நாட்களில் ஒருநாளாவது செபமாலைசொல்லத்தவறாதே! முழுச் செபமாலைசொல்ல நேரமில்லாவிட்டால் ஒருகாரணிக்கமாவது சொல். ஒருகாரணிக்கமாவதுஓதஎல்லாருக்குந் தருணங்கிடைக்கும். பிள்ளையாகிய உன்னிடமிருந்துஆசிக்கும் ரோசாமலர்களைப் பெறுவதில் உன்பரலோக அன்னையான கன்னிமரியாய்க்கு மகிழ்ச்சிஉண்டு.

---

தில் தமிழரும், முஸ்லீம்களும் சகோதரபாசத்துடன் ஐக்கியமாகவும், சௌசன்யமாகவும் வாழ்ந்துவருவதைக் காணத் தாம் சந்தோஷமடைந்ததாகவும் கொழும்புக்குத் திரும்பியதும் யாழ்ப்பாண நூல்நிலையத்துக்குப் பல நூல்களை அன்பளிப்பாகத் தாம்அனுப்பிவைக்க உத்தேசித்திருப்பதாகவும் தெரிவித்துநின்றார்.

## இரணைமடுக்குளமும் காலபோகமும்

1957-58-ம் ஆண்டின் காலபோக வேளாண்மை சம்பந்தமான விஷயங்கள்பற்றி ஆலோசித்துத் தீர்மானிப்பதற்காக இரணைமடு, கரைச்சிப்பகுதிகளிலுள்ள கமக்காரரின் கூட்டமொன்று கிளிநொச்சியிலே நடைபெறலாயிற்று. தற்போது இரணைமடுக்குளத்தில் இரண்டுஅடித் தண்ணீர்மாத்திரம் இருப்பதால் அதைக்கொண்டு 20,000 ஏக்கர்நிலத்துக்கு நீர்பாய்ச்ச முடியாதிருக்கிறதென்றும், மழைபெய்து குளத்தில் பத்துஅடித்தண்ணீர் வந்ததும் கமங்களுக்குத் தேவைப்படின் நீர்பாய்ச்சப்படுமென்றும், இரணைமடுக்குளத்திலிருந்து மாசிமாதம் 28-ந்திகதிவரைதான் கமங்களுக்கு நீர்உதவப்படுமென்றும் ஆலோசனைச்சபை செய்த தீர்மானங்களையும், மற்றுஞ்சில தீர்மானங்களையும் பளைக்காரியாதிகாரி திரு. முருகேசம்பிள்ளை அவர்கள் கூட்டத்தில் எடுத்துக்கூறினார். கடைசியாகச் சகலதீர்மானங்களும் ஏகமனதாக நிறைவேறின.

---

### ஆசிரியர்களின்

## ஞானவொடுக்கம்

வருகிற ஐப்பசிமாதம் 18-ந் திகதி வெள்ளிக்கிழமை பின்னேரந் தொடக்கம் 22-ந் திகதி செவ்வாய்க்கிழமை காலைவரைக்கும் மருதமடுத் திருப்பதியில் ஒருஞானஒடுக்கம் நடைபெறும்.

முதலாம் ஞானஒடுக்கத்தில் பங்குபற்றாத ஆசிரியர்கள், ஆங்கில உதவி ஆசிரியர்கள்உட்பட இந்த ஞானஒடுக்கத்தில் பங்குபற்றவேண்டுமென விரும்புகிறோம்.

இதிற் பங்குபற்ற விரும்பும் ஆசிரியர்கள் நமக்குக் கூடியசீக்கிரம் அறிவிக்குமாறு கேட்டுக்கொள்ளுகிறோம்.

ஆசிரியர்கள் தங்கள் பாவனைக்குத் தேவையான ஞானவாசினைப் புத்தகங்களைக் கொண்டுவரும்படியும் கேட்டுக்கொள்ளுகிறோம்.

PHILIP PONNIAH
Gen. Manager of R. C. Schools

Jaffna, 24-9-57.

---

## பெற்றோர்தின விழா

நிகழும் 12-9-57 வியாழக்கிழமை மாலை 5-30 மணியளவில் போளவத்தை தமிழ்மகளிர் பாடசாலையில் கட்டளைக்குரவர் வண. யு. கிளமன்ட் பர்ணாந்து சுவாமியவர்கள் தலைமையில் அதிவிமரிசையாகப் பெற்றோர்தினவிழா நடந்தேறியது. ஆரம்பத்தில் சிறுமியர்சிலரால் வந்தனப்பா பாடப்பட்டு, பெரியோர்கட்கு மலர்ஆரங்கள் அணிவிக்கப்பட்டன. அடுத்து ஆசிரியை செல்வி ஒதியாப் பர்ணாண்டோவால் பள்ளியறிக்கை வாசிக்கப்பட்டது. பின்னர் நீர்கொழும்பு அர்ச். மரியநாயகி ஆங்கிலக் கல்லூரியைச்சேர்ந்த ஆசிரிய பண்டிதர் ஜோன்ஸ் டனிஸ்லாவுஸ் பெர்ணாண்டோ அவர்களால் "பெண்ணும் பெண்ணழகும்" எனும் பொருள்பற்றித் தேனினுமினிய தமிழ் நடையில் இனியதோர் சொற்பொழிவு நிகழ்த்தப்பட்டது. இதையடுத்துக் கட்டளைக்குரவரின் சிறுவுரையுடன் பாடசாலைமாணவிகளால் உருவாக்கப்பட்ட ஓவியமான "செலினின் தேவ அழைத்தல்" எனும்நாடகம் திறம்பட நடித்துக்காட்டப்பட்டது. நாடகத்தின் இடையிடையே கண்கவர்நடனங்கள், ஆங்கிலநிகழ்ச்சிகள், நகைச்சுவைக் கட்டங்கள்போன்ற சிறுசிறு நிகழ்ச்சிகள் இடம்பெற்று நாடகத்தை மேலும் சிறப்பித்தன. முடிவில் ஆசிரியை திருமதி வினிப்பிறீடா பெர்ணாண்டோவால் விழாவிற்கு முகங்கொடுத்திருந்த அனைவருக்கும் நன்றிநவிலப்பட்டதுடன் தொடர்ந்து மாணவிகளால் "தேசிய கீதம்" இன்னோசையுடன்எழும்ப இரவு 8-30மணியளவில் விழா இனிது முடிவெய்தியது.

அங்கம்பிட்டி செல்வி டெய்சி இராணி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அங்கும் இங்கும்

## தமிழரும்ஒற்றுமையும்

தமிழரின் பொருளாதார சுபீட்சமும், அரசியல்முன்னேற்றமும் வெகுவாகப்பாதிக்கப்பட்டிருக்கும் இச்சமையத்தில் தமிழ்ச்சமூகத்தின் பல்வேறு பிரிவினரிடையேயும் முன்னொருபோதுமில்லாத அளவுக்கு ஒற்றுமைஇருக்க வேண்டியது அவசியமாகும்''

**சேர்கந்தையா வைத்தியநாதன்**

## சாதித்துவேஷமும் சமயதுவேஷமும்

"இங்நாட்டில் பெரும்பீதி ஏற்பட்டுள்ளது. சிலஆண்டுகட்குமுன் சமாதானம்நிலவிய இங்நாட்டிலே இன்று சாதித்துவேஷம், சமயதுவேஷம் பலவும் தாண்டவமாடுகின்றன. அரசாங்கம் இதுவிஷயமாகச் செய்ததென்ன? இங்காட்டில் அமைதியும், சமாதானமும் நிலவச்செய்வதில் அரசாங்கம் தவறியதைமுன்னிட்டு எனது வன்மையான கண்டனத்தைத் தெரிவித்துக்கொள்ளுகிறேன்.''

**செனற்றர் எட்மன்ட் கூரே**

## பதவியில்வர முயற்சி

"டக்றர் என். எம். பெரேரு முதலியோர் குழப்பமான சூழ்நிலைகளைச் சாதகமாக வைத்துக்கொண்டு அரசாங்கபதவியில்வர முயற்சிக்கின்றனர். இவ்விதமுயற்சி பெரும்பாலும்தோல்வியையேகாணும். அத்துடன்உயிரிழந்த ஐக்கியதேசியகட்சி (யு. என். பி.) மறுமுறையும் அரசியல் அரங்கத்தில் வர முயற்சிக்கின்றது. இதுமறுமுறையும் அரங்கம் ஏறுமென்பது பகற்கனவாகும்.''

**திரு. டி. பி. இலங்கரத்ன,**
தொழில்-சமூகசேவா-வீடமைப்புமந்திரி

## அங்கு செல்லமுடியாது

"எம். ஈ. பி. அரசாங்கம் மொழிப்பிரச்சினையை மறந்துபோய்விட்டதாகத்தெரிகிறது. வடமாகாணமும், கீழ்மாகாணமும் ஏற்கனவேஇலங்கைத்தமிழருக்கு மாத்திரமல்ல, இந்தியதமிழருக்கும் கொடுக்கப்பட்டுவிட்டன. எதிர்பாராதநிகழ்ச்சிகள் அன்றாடன்று நிகழ்கின்றன. மந்திரிகள், எம். பி. கள் எவரும்அங்குசெல்லமுடியாது. சென்றவர்கள்யாவரும் மோசமாகநடத்தப்பட்டனர். தமிழ்இரத்தம்கலந்த சிங்களவர்கள் நாட்டைத் தமிழர்களுக்குக் கொடுக்க முனைகின்றனர். பிராந்திய சபைகளை எதிர்த்துப்போராடச் சிங்களவர்கள் தயாராகவேண்டும்.''

**புத்தபிக்கு, மானவன்ச ஞானிசாரதேரோ.**

## நல்லொழுக்கமும் கடினஉழைப்பும்

"இலங்கையின் வருங்கால சுபீட்சமும், சுயதேவைப் பூர்த்தியும் வாலிப விவசாயிகள் கையிலேயே முற்றுகத் தங்கியுள்ளன. உணவிலே இலங்கையின் சுயதேவையைப் பூர்த்தியுள்ளதாக்க அவர்கள் கடினமாக உழைக்க வேண்டும். ஒருவர் விவசாயியாக இருந்தால் மற்றவர்கள் அவரைத் தாழ்ந்தபடியில் உள்ளவராகவும், முற்றிலும் வேறானவகுப்பைச் சேர்ந்தவராகவும் கருதும் விசித்திரமனப்பான்மை இலங்கையில் காணப்படுகிறது. இத்தமனப்பான்மை பெரிதும் கண்டிக்கப்படவேண்டியது. அத்துடன் நாட்டுப்பற்றுடைய ஒவ்வொருவரும் இத்தகையஎண்ணத்தை மனதில் ஒருபோதும் வைத்திருக்கக்கூடாது. இலங்கையிலுள்ள ஒவ்வொருமனிதரும் — அவர் விவசாயியாகவோ, தொழிலாளியாகவோ, அல்லது கிளாக்குவாகவோ இருந்தாலுஞ்சரி அவர் நல்லொழுக்கமும், கடினஉழைப்பும் உள்ளவராயிருப்பின் மற்றவருடன் சமமான கௌரவமும், மரியாதையும் உடையவராவர்.''

**திரு. ஜே. சி. டபிள்யு. முனசிங்கா,**
சிலாபம் எம். பி. யும்,
அரசாங்க பிரதம கொறடாவும்.

## அவர்களின் கண்ணும் கருத்தும்

"மாறுபட்ட அரசியல்கருத்துகளை உடையவர்கள் ஐக்கிய தேசியக் கட்சியை எதிர்த்தார்கள். அவர்கள்ஒன்று சேர்ந்து ஐ. தே. கட்சியை வீழ்த்தி அரசாங்கம் ஒன்றை அமைத்தார்கள். அதனால்தான் இப்போதைய அரசாங்கத்தில் இத்தனை கருத்துவேறுபாடுகள் இருக்கின்றன. அரசாங்கத்தில் ஐக்கியம்ஏற்படுமாறு முயற்சி எடுக்கப்பட்டது. ஆனால், திரு. பிலிப் குணவர்த்தனபோன்ற மந்திரிகள் இலங்கையிலே கம்யூனிஸ்த அரசாங்கத்தை அமைப்பதிலேயே கண்ணுங் கருத்துமாய் இருக்கின்றார்கள். தோட்டங்கள் தேசியமயமாக்கப்பட்டால் ஏராளமான வருமானங்களை நாடுஇழந்துவிடும்.''

**திரு. ஹென்றி அபேவிக்கிரம,**
போக்குவரத்து மந்திரிகாரியாலய
பாராளுமன்ற காரியதரிசி.

## தமிழின் நியாயமானஉபயோகம்

"சேர்ஜோண் கொத்தலாவலையும், மற்றும் ஐக்கியதேசியக்கட்சித் தலைவர்களும் தமிழுக்குச் சமஅந்தஸ்துக் கொடுப்பதாக வாக்குறுதி அளித்தார்கள். ஆனால், இன்று தமிழுக்கு நியாயமான உபயோகம் அளிப்பதற்குச் செய்துள்ளமுடிவை எதிர்த்துப் பிரசாரஞ்செய்து வருகிறார்கள். வடபகுதியிலும், கிழக்குப்பகுதியிலும் மட்டுமே தமிழுக்கு நியாயமானஉபயோகம் இருந்துவரும். நூற்றுக்கணக்கான வருடங்களாக அப்பகுதி மக்களின்மொழி தமிழ்மொழியாக இருந்து வந்திருக்கிறது. தமிழரை மற்றொரு மொழியை உடனடியாகக் கற்கும்படி செய்வது முடியாதகாரியம். அவர்களின் தினசரிவேலைகள் தமிழிலேயே இருக்கும். சிங்களம்மட்டுமே அரசகருமமொழியாக இருக்கும்.''

**திரு. பிலிப் குணவர்த்தன,**
உணவு-விவசாயமந்திரி.

## அங்கு சுதந்திரம்இல்லை

"ருஷியாவும், சீனாவுமாகிய இருநாடுகளும் பெரிதும்அபிவிருத்தியடைந்துள்ள நாடுகளாயினும், அந்நாடுகளிலுள்ளமக்கள் இலங்கைமக்களிடமுள்ள சுதந்திரத்தை அனுபவிக்கிறார்களில்லை. அந்நாடுகளில் ஏழைகளுக்குச் சுதந்திரம் இல்லை. பொதுமக்களிடம் கருணைகாட்டாத செல்வாக்கும், செல்வமும் படைத்தவர்களால் ஏழைகள் ஆளப்படுகிறார்கள். எத்தனைநியாயமானதாய் இருந்தாலும் பொதுமக்கள் அரசாங்கத்துக்குஎதிராக ஒன்றுஞ்செய்துகொள்ள முடியாது. ருஷியபிரசைகளுக்கு மறுக்கப்பட்டிருக்கிற வாக்குரிமையையும், ஜனநாயகஉரிமைகளையும் இலங்கைமக்கள் அனுபவிக்கின்றார்கள். இந்த அடிப்படைஉரிமைகளை அனுபவிக்காததால் தாங்கள்விரும்பும்அரசாங்கங்களை ருஷியமக்கள் தெரிவுசெய்ய முடியாது.''

**திரு. டி. பி. இலங்கரத்தின,**
தொழில்-வீடமைப்பு-சமூகசேவா மந்திரி.

## செல்வாக்குள்ள குடும்பம்

சமீபத்திலே லண்டன்மாநகரில் நடந்தேறிய சர்வதேச பாராளுமன்றங்களின் சம்மேளனத்தில் இலங்கையிலிருந்துசென்ற ஒருமாமியும், மருமகளும் பொலிவாக வீற்றிருந்தனர். திருமதி. குசுமா குணவர்த்தனவும், திருமதி. விவியன் குணவர்த்தனவுமே இந்தப்பாத்திரங்கள். இன்று நமதுநாட்டு அரசியல்அரங்கில் குணவர்த்தனகுடும்பம் எவ்வளவுசெல்வாக்குடன் விளங்குகிறதுஎன்பதை இச்சந்தர்ப்பம் மேலும் தெளிவாகக்காட்டுகிறதென்று துணிந்து கூறிவிடலாம். குடும்பத்தின் பெருந்தலைவராக உணவுமந்திரி திரு. பிலிப் குணவர்த்தன வீற்றிருக்கிறார். அவரின் இளையசகோதரர் திரு. றொபேட்குணவர்த்தன சனப்பிரதிநிதிகள் சபையின் எதிர்க்கட்சியின் பிரதான தலைவர்களில் ஒருவர். உணவுமந்திரியின் மனைவி திருமதி குசுமா குணவர்த்தன அரசாங்ககட்சியில் நிறைந்த செல்வாக்குள்ளவர். இவரின்மருமகள் திருமதி. விவியன் குணவர்த்தன லங்கா சமசமாஜகட்சியின் "தூண்க''ளில் ஒருவர். இவர்கணவர் திரு. லெஸ்லி குணவர்த்தன கட்சியின் பொதுக்காரியதரிசி. இவர்மச்சான் களுத்துறை எம். பி. திரு. சம்லி குணவர்த்தன. ஒருகுடும்பத்திற்கு அரசியலில் இதற்குமேல் என்னவேண்டும்?

**ஓர் அரசியல்நிருபர்.**

## ஒருபோதும் பலிக்காது

"டக்றர் என். எம். பெரேருவும், அவரதுகட்சியினரும் அரசியல்அதிகாரத்துக்குவர வீண்கனவு காண்கின்றனர். ஆனால், அக்கட்சித்தலைவர்களில் மக்களுக்கு நம்பிக்கையில்லாதிருக்கும்போது, அக்கனவு எவ்வாறுபலிக்குமென்பதை என்னால் புரிந்துகொள்ள முடியவில்லை. தனது சுயஅரசியல் நலனுக்காக அரசாங்கத்தைக் கவிழ்க்க எத்தனிக்கும் லங்காசமசமாஜகட்சியே இந்தஅரசாங்கத்துக்கு ஒருபெருந்தலையிடியாக இருக்கிறது. மக்களின் வாழ்க்கைத்தரத்தைஉயர்த்த அரசாங்கம் செய்யும் கைங்கரியங்களுக்கெல்லாம் எதற்காகக் கல்வியறிவுள்ள டக்றர் பெரேருவைப்போன்றார் முட்டுக்கட்டைபோட முயலுகின்றார்களென்பதும் எனக்குத்தெரியவில்லை. அரசாங்கத்துக்குஎதிராக மக்கள்மனதை மாற்றிவிட டக்றர்பெரேரு முயற்சிக்கிறார். நாட்டினருக்கு அவர் வீண்வாக்குறுதிகளையும், விடைகளையும அளித்துவருகிறார். லங்காசமசமாஜகட்சியின் வெறும் வாக்குறுதிகளைக்கேட்டு ஏமாந்துவிடாதீர்கள். அரசாங்கம் நாட்டின்பிரச்சினைகளைத் தீர்த்துவைக்கும்வரை பொறுமையாயிருங்கள்.''

**திரு. டி. பி. இலங்கரத்தின,**
தொழில்-வீடமைப்பு-சமூகசேவா மந்திரி.

## சகலமக்களுக்கும் சமஉரிமை

"இலங்கை ஜனநாயக அடிப்படையில் ஆளப்பட்டுவரும் ஒருநாடு. இந்நாட்டில்வாழும் நான்குவகைமக்களுக்கும் ஏற்றத்தாழ்வின்றி உரிமைகள் உண்டு. நாட்டில் வாழும் மக்கள் சுபீட்சமாக வாழவேண்டுமென்பதே எமது அவல். பாஷைப் பிரச்சினை சம்பந்தமாக அண்மையில் பிரதமருக்கும், சமஷ்டிக்கட்சித் தலைவருக்குமிடையே முதற்படியான ஒப்பந்தம்ஒன்று கைச்சாத்திடப்பட்டுள்ளது. இந்த ஒப்பந்தத்தைப் பலர் கண்டிக்கின்றனர். ஆனால், பெரும்பான்மையாக அரசியல்வாதிகளிடமிருந்தே ஆட்சேபனை எழுகின்றது. மக்களின் சுபீட்சமான வாழ்விற்கு மாசுஏற்படுத்தும் நோக்கமாகவே இவ்வித கூக்குரல்களை இவர்கள் செய்கின்றனர். இவைகளை நம்பி மக்கள்ஏமாந்துவிடக்கூடாது. ஆகவே, மக்கள் எதுசரி, எதுபிழை என்பதை உணர்ந்து தீர்ப்புக்கூறுதல் பிரதானமாகும்.''

**திரு. டி. பி. இலங்கரத்ன,**
தொழில்-சமூகசேவா-வீடமைப்புமந்திரி

# இழந்த கண்பார்வையைப் பெறமுடியுமா ?

"எண்ணும்எழுத்தும் கண்ணெனத்தகும்'' என்ற வாக்கியம் கண்ணின் முக்கியத்துவத்தை எடுத்துக்காட்டும். கண்போனபின்பு இவ்வுலகில்வாழ்வதில் இன்பமில்லைஎனலாம்.

கண்ணை இழந்தவர்களுக்கு இரவும் பகலும் ஒன்றுபோல்தோன்றும். உலகம் ஒரேஇருட்டாகத்தான்இருக்கும். மற்றவர்கள்கண்டு அனுபவிக்கும் இயற்கையின் எழில்களையோ, இறைவனின்பொழில்களையோ கண்ணுற்று அவர்கள் இன்பமெய்தமுடியாத துர்ப்பாக்கியசாலிகள்.

அவர்கள்படும் மனவேதனை ஒருபுறமிருக்க, அவர்களுக்காக நாம்பரிந்து பச்சாத்தாபப்படவேண்டிய கடமையும்இருக்க, அவர்களைக் "கண்ணற்ற கபோதிகள்''என்று நெஞ்சாரநையாண்டிசெய்யும் கண்ணுள்ள "கபோதிக''ளும் நம்மிடையே இருக்கத்தான் செய்கிறார்கள்.

ஆனால், பிறவியிலேயே கண்ணிழந்தவர்கள் படும் மனவேதனையைவிட இடையிலே பல்வேறுகாரணங்களினால் கண்பார்வைஇழந்தவர்கள் அனுபவிக்கும் நரகவேதனை நாவால் நவிலுந்தரமன்று.

இன்னுமேசிலர் "என் கண்ணுணை இதைச்செய்யேன்''எனச் சத்தியம் செய்வதைக் கிராமப்புறங்களிற் காணலாம். இதுவும், இழப்பவற்றுள்எல்லாம் கண்ணிழப்பதேகொடிது என்பதைக் காட்டுகிறது.

இத்தகைய கொடியகுருட்டுத்தன்மையைப் போக்கும்மருத்துவம் இதுவரை மனிதர்களின் சிந்தனையைத் தூண்டியே வந்துள்ளது.

அக்காலத்தில் இப்பிணியையும் இறைவனின்கருணையால் அகற்றமுற்பட்டனர். ஒருகால் சபதம்தவறினமையால் சுந்தரமூர்த்திநாயனருக்கு இரண்டுகண்களும் மறைந்தனவாம்; அப்பொழுது நாயனர்திகைத்து நெடிதுயிர்த்து "இந்தக் கொடுந்துயரத்தை நீக்கும்பொருட்டு நமதுகடவுளைப் பாடுவேன்'' என்றுதுணிந்து திருப்பதிகத்தைப் பாடினாராம். ஆனால், இது ஏழாம்எட்டாம் நூற்றுண்டுச் செய்தி.

இருபதாம்நூற்றுண்டில் எதற்கும் விஞ்ஞானமே சமயசஞ்சீவியாகப் பயன்படுத்தப்படுகிறது. கண்ணின் புண்ணை ஆற்றும் சத்திரசிகிச்சைமுறை துரிதமாக அபிவிருத்தியடைந்து வருகிறது.

பழுதானகண்களைப் பழுதுபார்க்குஞ்சிரமம் இப்போதுகைவிடப்பட்டு இறந்தவர்களின் பழுதில்லாதகண்களைஎடுத்து பழுதடைந்த கண்களுக்குப்பதிலாகப் பதிக்கிறார்கள்.

உயிரற்ற உடல்களிலிருந்து எடுக்கப்படும் கண்களிலிருந்து நீர்ப்பசையைநீக்கி அவைகளைக் காலவரம்பின்றிப் பாதுகாத்துவைக்கக்கூடிய ஒரு புதுமுறை கண்டுபிடிக்கப் பட்டுள்ளது. இறந்தவரின்கண்களை அகற்றிப் பாதுகாத்துப் பார்வை அற்றவர்கள் அல்லது பார்வைகுறைந்தவர் முகத்தில் அந்தக்கண்களைப்பொருத்த டக்றர்மாருக்கு இதற்குமுன் எழுபத்திரண்டுமணிநேர அவகாசமிருந்தது. ஆனால், வாஷிங்ரனிலுள்ள வால்ற்றர் றீட் இராணுவநிலையத்து அணு ஆராய்ச்சிப்பிரிவின் உதவியுடன் இன்றையவிஞ்ஞானிகள் கண்ணின் சவ்விலிருந்து நீர்ப்பசையைநீக்கி அதனைநிரந்தரமாகக் கிளிஸ்றினில் பாதுகாத்து வருகின்றனர். வேண்டியபோது 'டக்'கென்று இக்கண்களைப்பொருத்தி இழந்தபார்வையை மீண்டும் பெறச்செய்யலாம்.

---

● ஒருநாளில் மனித இருதயம் 2,500 கலன் இரத்தத்தை வெளியே தள்ளுகிறது. ஒருவனது வாழ்நாளில் அவன் இருதயம் வெளியே தள்ளும் இரத்தம் 5 கோடியே 50 லட்சம் கலனுக்குச் சரியாகும். ஒரு ஆண்டில் இருதயம் நான்குகோடிதரம் அடிக்கின்றது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அருட் செல்வி

# மரியாயின் சேனை

(முன்தொடர்ச்சி)

## 5-ம் அதிகாரம்

### மரியாயின் அழைத்தல்

மரியாயின்சேனை உலகமுழுவதும் பரவவேண்டுமென்று திருச்சபை ஆசிக்கிறது. அதைத்திருச்சபை அங்கீகரித்து ஆசீர்வதிக்கிறதென்றும், எங்கள் இராக்கினியே எங்களை அழைக்கிறளென்றும் மூன்ரும் அதிகாரத்தில் கண்டுகொண்டோம். இப்போது எங்களை அவள் எப்படி அழைக்கிருள்? ஏன் அழைக்கிருள்? என்று சற்றேஆராய்ந்து பார்ப்போம்.

சர்வேஸ்பரனின் சத்துருக்களுடன் போராடவாருங்கள்என்று அந்த இராக்கினி — சேனையின் தளபதி எங்களை அழைக்கிருள். ஞானயுத்தஞ்செய்ய வாருங்களென்று எங்களை அழைக்கிருள். தைரியமாய் வாருங்கள், பயப்படாதேயுங்கள், உங்கள் முன்னணியில் நான் நிற்கிறேன், ஞானயுத்தஞ் செய்யுங்கள், வெற்றி அடைவீர்கள் என்று எங்களைத்தேற்றுகிருள். அடுத்தடுத்து ஒரேதொனியாய் எங்களை அழைக்கிருள். ஏன் இப்படி எங்களை அழைக்கிருள்? இதன்காரணம் என்னவென்று சற்றே ஆராய்வோம்.

இக்காலம் எப்படியானதென்று உலகமே அறிந்த விஷயமானுலும் அதைஇங்கு சுருக்கமாய் எடுத்துக காட்டுவோம். எம்திருமறைக்கு ஓர்புதியஆபத்துத் தோன்றியிருக்கும் காலம் இது. கடவுள் இல்லையெனச்சாதிக்கும் நாஸ்திகர் பலஇடங்களிலும் தோன்றித் தாங்கள்கடைப்பிடித்திருக்கும் அபத்தக் கொள்கைகளை உலகமெங்கும் பரப்பிக் கொண்டுதிரியும் காலம் இது. கத்தோலிக்கபத்திரிகைகள் இதைப்பற்றிப் பிரசித்தஞ்செய்து வருகின்றன. அவ்வாறிருக்கவும் எங்கள் தேசத்தில் அல்லது நாங்கள் வசிக்குமிடத்தில் நாஸ்திகர் இல்லையே இல்லையெனச் சிலர்சாதிக்கவும் கூடும். முற்காலத்தில் நாஸ்திகர் அத்திபூத்தது[illegible]ால அங்குமிங்குமாகச் சொற்பபேர்மாத்திரம் இருந்தனரென்றும், அப்போது பகிரங்கத்தில் வெளிவர அவர்களால் முடியவில்லை என்றும், இக்காலத்திலோ அவர்கள் பகிரங்கத்திலே தைரியத்தோடு வெளிகொண்டு தங்கள்கொள்கைகளை எங்கும் பிரசாரஞ்செய்து வருகிருர்களென்றும், பரலோகத்தையும், பூலோகத்தையும் அவற்றிலடங்கிய சகலத்தையும் உண்டாக்கிக் காப்பாற்றிவருகின்ற சர்வேஸ்பரனை அகற்றிவிட்டு அவரது சிங்காசனத்தில் தாங்களே இருந்துகொண்டு சர்வாதிகாரம் செய்யலாமென மனப்பால் குடித்துக்கொண்டு வருகிருர்கள் என்றும், உலகம் உண்டானதுமுதல் எந்தமதத்தினராயினுஞ்சரி சகலசாதிசனங்களுமே வானத்தையும், பூமியையும் படைத்து ஆண்டுநடத்திவரும் சர்வவல்லப கடவுள்ஒருவர் இருக்கிருரென அங்கீகரித்துத் தங்களுக்குத் தெரிந்தமட்டிலே அவரை ஆராதித்து, ஸ்துதித்துத் தோத்திரம் செய்து வந்திருக்கும் போது, இப்படியான நாஸ்திகர் அங்குமிங்கும்புகுந்து தங்கள் நாஸ்திக வேலையைப்புரிந்து வருகின்றனரென்றும் கத்தோலிக்க பத்திரிகைகளில் நாங்கள் வாசித்திருக்கிறேம்.

இந்த நாஸ்திகர்கள் விரிக்கும் வலையில் நாங்கள் அகப்படுவதா? அல்லது எந்த மதத்திலுமுள்ள நமது அயலாரை அதில் அகப்பட விட்டுவிடுவதா? இதுவிஷயமாய் நாங்கள் எச்சரிக்கையாய் இருப்பது மாத்திரமல்ல, எங்கள் அயலாரையுமே பிறர்சிநேகத்தின் நிமித்தம் எச்சரித்துக் காப்பாற்றவும் வேண்டும்.

இந்த நாஸ்திகம் சாதி சமய பேதமின்றி எவரிடையுமே பரவுகின்றது. அது கத்தோலிக்கருள்ளும் புகுந்துவிட்டதெனப் பத்திரிகைகள் கூறுகின்றன. நாஸ்திகர்கள் எந்தமதத்தினருக்கும் நாளாவட்டத்தில் சிறுகச் சிறுகத் த[illegible]ள் விஷத்தைப் பருக்கிவிடுவார்கள். அவ்விஷத்தை உட்கொண்டவர்கள் சிறுகச் சிறுகத் தங்கள் விசுவாசத்தை இழந்து கடைசியிலே கடவுள் இல்லையென்று பிதற்றி நரகப் பிசாசின்தோழராய் விடுவார்கள். ஆதலின் இந்த ஆபத்திலிருந்து நாங்கள் எல்லோரும் தப்பிக் கொள்ள விழிப்பாயிருக்கவேண்டும்.

பரிசுத்தபிதா 11-ம்பத்திநாதரின் கட்டளை என்னவென்று நாங்கள் அறிந்திருக்கிறேமா? கத்தோலிக்கமக்கள்பொதுவுடைமைக்கட்சியில் ஒருபோதுமே சேரக்கூடாதென்று கண்டிப்பாக அவர் கட்டளைவிதித்திருக்கிருர். ஆதலால், நாம்மிகவும் விழிப்பாயிருக்க வேண்டும். நமது கத்தோலிக்க சகோதரர்கள் யாவரும் இதனை அறியச்செய்து எல்லோரும் ஒன்றுகூடி அக்கட்சியினரைஎதிர்த்துத்தாக்கிவிலக்கி ஒழிக்க ஏற்றவழிவகைகளைச் செய்யவேண்டும். ஒவ்வொருவரும் மற்றவர்களுக்கு முன்மாதிரிகையாய் இருக்கவேண்டும். கத்தோலிக்க பத்[illegible]ிகைகளையும், துண்டுப் பிரசுரங்களையும் எல்லோர் மத்தியிலும் பரப்பவேண்டும். ஆத்தும இரட்சணியத்துக்கு விரோதமாய் எழும்பும் எந்தச்சத்துருவையும் எதிர்த்து அழித்து ஒழிக்கப் பலம்பொருந்திய கேடயம் செபம். செபத்தினுல் ஆகாதது ஒன்றுமில்லை. என்னையின்றி உங்களால் எதுவும்செய்ய முடியாதுஎன்று நமது திவ்வியஇரட்சகர் திருவுளம்பற்றி யிருக்கிருர். செபஞ்செய்யுங்கள், தபம்புரியுங்கள், விழித்திருந்து செபஞ்செய்யுங்கள் என்கிருர்.

நமது பரிசுத்த தேவதாயும் இதையே நமக்குப் படிப்பிக்கிருள். நமது இரட்சணிய அலுவலில் அவள்மிகவும் விழிப்பாயிருக்கிருள். திவ்வியபாலனைப் பெத்லகேமில் யாதாமோர் வியாகுலமுமின்றிப் பெற்றெடுத்த அந்த இரக்கமுள்ளதாய், கல்வாரிமலையிலே சிலுவையடியில் மனுக்குலத்தைத்தமதுபிள்ளைகளாய்அடைந்தபோது எவ்வளவு வியாகுலங்களை அனுபவித்தாள். இவ்விதமாகப் பெற்றபிள்ளைகள் கெட்டழிந்துபோவதை அந்தஇரக்கமுள்ளதாய் பார்த்திருப்பாளா? எத்தனையோபேர் கடவுள் இல்லையென்று தங்கள் மனப்போக்கின்படி சீவிப்பதுபோதாமல் மற்றவர்களையும் தங்கள் மாயவலையில் அகப்படுத்துகிருர்கள். சிலர் கிறீஸ்துவர்களாய் இருந்தும் திருச்சபையின் சட்டதிட்டங்களைப் புறக்கணித்துத் தங்கள் இஷ்டம்போலநடந்து கெட்டழிந்து போகிருர்கள். சிலர் நல்லகத்தோலிக்கராய்இருந்தும் இடையிலே பாவத்தில்விழுந்து கெட்டழிந்து போகிருர்கள். இப்படியாகப் பாவம் எப்பக்கத்திலும் மலிந்து குவிந்திருக்கும்போது இரக்கமுள்ள சர்வேஸ்பரன் அளவில்லாத நீதியுள்ளவராகையால் இப்பாவஉலகை எப்படித்தண்டிக்கப் போகிருரோவென்று நமது இரக்கமுள்ளதாய்பரதவிக்கிருள். சொல்லமுடியாத வியாகுலம் அனுபவிக்கிருள். எவ்விதமும் நம்மைக் காப்பாற்ற விரும்புகிருள்.

லூர்துகெபி, பாத்திமாமுதலாம் பதிகளில் எத்தனையோ முறை தேவதாயார் காட்சியளித்து மனிதர்களுக்கு வரப்போகும் கேடுகளைப்பற்றி எச்சரித்து, கடவுளின் கோபத்திலிருந்து மக்கள் தப்பித்துக் கொள்ளுதற்கு என்னென்ன செய்யவேண்டுமென்று அறிவித்துள்ளாள் அல்லவா? செபமாலை சொல்லுங்கள்! செபமாலைசொல்லுங்கள்! என்று எத்தனைதரம் மனுக்குலத்துக்கு அறிவித்திருக்கிருள். எத்தனைபேர் இதற்குச் செவிசாய்த்தார்கள்? பெருந்தொகையான மனிதர் எமது இரக்கமுள்ளதாயின் எச்சரிக்கைகளை அலட்சியம்செய்து விட்டார்கள். கடைசியாக நமது திவ்விய இரட்சகர்தாமே ஷீட் என்றகிராமத்தில் கூறியஎச்சரிக்கையிலே: நமது திருத்தாயார் காட்சிகள்கொடுத்து மனுக்குலத்தவர்கள் என்னசெய்ய வேண்டுமென்று அவர்களை எச்சரித்திருந்தார்; மனிதர் அவருடைய எச்சரிக்கைகளை அலட்சியஞ் செய்துவிட்டார்கள்; இப்போது நாமே ஆக்கினைகள் சமீபித்திருக்கும் இந்தக்கடைசிவேளை அவர்களை எச்சரிக்க வந்திருக்கிறேம்; வரப்போகிறகாலம் படுபயங்கரமானது; மனிதர் இனிமேலாவது தபம் புரியவேண்டும்; தங்கள்பாவங்களை அறவேவெறுத்துத் தள்ளவேண்டும்; அவர்களைத் தண்டிக்கவேண்டுமெனச் சர்வேசுரன் கோபங்கொண்டிருக்கிருர்; அவருடைய நீதியான கோபத்தைச் சாந்திசெய்யவேண்டும்; அதற்காகத் தபத்துடனே செபஞ்செய்யவேண்டும்; செபத்தின்மேற் செபம் இடைவிடாது செய்யவேண்டும்; விசேஷமாகத் திருச்செபமாலை அடிக்கடி ஓதவேண்டும்; செபமாலை தேவனிடத்து மகாவல்லமைபெற்ற செபம்; உலகத்தவர்கள் விரும்பிநாடும் இன்ப சுகங்களையெல்லாம் ஒழித்துவிடவேண்டுமெனத் தெரிவித்திருக்கின்ருர்.

இவ்வாறு தேவதாயாரும், நமது திவ்விய இரட்சகரும் எங்களுக்குக் கொடுத்த எச்சரிக்கைகளை நாங்கள் அலட்சியம் செய்யலாமா? இனிமேலாவது தேவதாயாரின் அழைத்தலுக்குக் காது கொடுப்போமாக. பாவம்நிறைந்த இந்த உலகைச் சர்வேசுரன் தண்டிக்க இருக்கிருரென அறிந்தமாத்திரத்தில் நாம் அதற்குத் தப்பிநடக்க முயலவேண்டும். பிறர்சிநேகத்தின்நிமித்தம் நமது அயலாரையும் காப்பாற்ற முன்வரவேண்டும் செபஞ்செய்யுங்கள். தபஞ் செய்யுங்கள். ஊழியஞ் செய்யுங்கள். இவைகளையே மரியாயின் சேனையாளர் புரிந்து வருகிருர்கள்.

## 6-ம் அதிகாரம்

### சேனையின் இலட்சணங்கள்

1. சேனையின் குணதிசயங்கள்:— மரியாயின் குணதிசயங்களே சேனையின் குணதிசயங்கள். மரியாள் ஆழ்ந்த தாழ்ச்சியுடையவள். மட்டற்ற கீழ்ப்படிதலுள்ளவள். வானுலகோரைப் போன்ற இங்கிதமுள்ளவள். இடையருது செபிப்பவள். எதையும் ஒறுக்கப் பின்வாங்காதவள். அற்பமும் பழுதற்ற கற்புடையவள். சலியாத பொறுமை யுடையவள். தெய்வீக ஞானமுடையவள். தன்னை முழுவதும் தத்தம் செய்யும் மனேதைரியமுள்ளவள். தேவசிநேகமுள்ளவள். ஒப்பற்ற உத்தம விசுவாசங் கொண்டவள். சேனையானது அவளுடைய விசுவாசத்தையும், தேவ சிநேகத்தையும், ஞானத்தையும், பொறுமையையும், ஒறுத்தலையும், செபப்பற்றுதலையும், இங்கிதத்தையும், கீழ்ப்படிதலையும், தாழ்ச்சியையும் அடைய முயற்சிக்கிறது. அவளுடைய சிநேகத்தையும், விசுவாசத்தையும் பின்பற்றிச் சகலவிதமானமுயற்சிகளையும் மேற்கொள்ளுகிறது. "முடியாதென்பது அதற்குஒரு சாக்காகாது; ஏனெனில், எல்லாம் தன்னுல் முடியுமென்றும், செய்யச் சுதந்திரமுண்டென்றும் அது எண்ணுகின்றது."

(வளரும்)

---

● செஞ்சீனுவின் ஆதிக்கத்திலுள்ள மஞ்சூரியநாட்டிலே நெடுங்காலமாக வேதகலாபனை நடைபெற்றுக்கொண்டு வந்தபோதிலும் அங்குள்ள 10 000 கத்தோலிக்கரும் திடமான வேதவிசுவாசமுடையவர்களாய் இருந்தவருவதாகச் சீனுவிலிருந்துசமீபத்தில் ஹொங்கோங் தீவுபோய்ச்சேர்ந்த வண. அலெக்சாண்டர் எய்ஸிமொண்ட், வண. கிறேஷன் கொலட்சியெச்க்எனும் போலிஷ்குருமார் இருவரும் தெரிவித்திருக்கின்ருர்கள்.

## மட்டக்களப்பு
## தாண்டவன்வெளித் தபால்

பரிசுத்த வியாகுலமாதா திருநாள்: 20-9-57 வெள்ளிக்கிழமை பரிசுத்த வியாகுலமாதா திருநாளானது வியாகுலமாதா பக்திச்சபையாரால் (கிறீஸ்தவ தாய்மார்) பங்கு ஆலயத்தில் விமரிசையாகக் கொண்டாடப்பட்டது. திருநாளுக்குமுந்தியநாள் காலை 6-00 மணிக்கு இப்பக்திச்சபையாரால் அச்சபை அங்கத்தவர்களாயிருந்து மரணித்தவர்களின் ஆத்துமஇளைப்பாற்றிக்காகத் திருப்பலிப்பூசை செலுத்தப்பட்டது. அன்று பிற்பகல் 6-30 மணிக்குச் செபமாலை, பிரார்த்தனையின்பின் விசுவாசிகளெல்லோரும் மெழுகுவர்த்திகள் காத்தேந்தி அணியாய்வர வியாகுலமாதா திருச்சுரூபத்தை எழுந்தருளப்பண்ணிச் சுற்றுப்பிரகாரமாகக் கொண்டுசென்றனர். அவ்வேளை சகல விசுவாசிகளும் தேவதோத்திரகீதங்கள் பாடி மாதாவை மகிமைப்படுத்தினர். பின்னர் ஆலயத்துள் உரியவிடத்தில் மாதாவை எழுந்தருளப் பண்ணினர். பங்குவிசாரணைக்குருவர் வண. ஜோர்ஜ் ஈ. எல். வம்பேக் சுவாமிகளால் மாலை ஆராதனைபாடித் திவ்விய நற்கருணை ஆசீர்வாதம் அருளப்பட்டது. திருநாளன்று காலை 6-00 மணிக்குப் பாடற்பூசை நிறைவேறியது. பூசையிலே இப்பங்கிலுள்ள சகல பக்திச்சபையாரும் கலந்து, திருவிருந்தருந்தித் தங்கள் மாதாவுக்கு நேர்த்திக்கடனைச் செலுத்தி மகிழ்ந்தனர். பூசையின்பின் பக்திச் சபையார் பங்குவிசாரணைக் குருவரைச் சந்தித்து அன்பளிப்புகள் வழங்கினர்.

## பிரசீடியவிழாவும் பத்தாம்ஆண்டு
## நிறைவுவிழாவும்

ஊர்காவற்றுறையிலே மரியாயின் சேனையின் "சம்மனசுகளுடையஇராக்கினி" சைனியஅங்கத்தினருக்குக் கடந்த 21-9-57 சனிக்கிழமை ஒருநன்னாளாகும். அன்றுதான் சேனைஸ்தாபகமான பத்தாவதுஆண்டு நிறைவுதினமாகும். மேலும் இப்பகுதியிலுள்ள மரியாயின்சேனைகளது பிரசீடியவிழாவும் அன்றேயாகும்.

அன்றுமாலை 4மணிக்குத் திவ்விய நற்கருணைஆசீர்வாதத்துடன் விழாக்கள்ஆரம்பமாயின. பங்குக்குருவர் அதிவண. வி. ஆர். தார்சீசியஸ்சுவாமியவர்கள் தலைமைவகித்தார். விசேஷ அழைப்பின்பேரில் யாழ்ப்பாணக்கியூறியாவின் ஞானத்தலைவர் வண. ஜே. ஏ. பிரான்சீஸ்சுவாமியவர்களும் சமூகமளித்திருந்தார். மேலும் நாரந்தனை தருமத்தின்கண்ணாடி (முதியோர் சைனியம்), சதாசகாயமாதா (பாலர்சைனியம்), காம்பன், வேதசாட்சிகளின் இராக்கினி (பாலர் சைனியம்), ஊர்காவற்றுறை கிறீஸ்துவினுடையமாதா (முதியோர் ஆண்கள்சைனியம்), இரட்சகருடையமாதா (பாலர்சைனியம்) என்பனவற்றின் நிரந்தரஊழிய அங்கத்தினர், உதவிஅங்கத்தினர், உத்தியோகஸ்தரென நூற்றுக்குமேற்பட்டோர் விழாக்களில் கலந்துகொண்டனர்.

"சம்மனசுகளுடையஇராக்கினி" சைனியத்தலைவி சகோதரி சபினுமரியாம்பிள்ளை அவர்கள் பத்தாண்டுஅறிக்கையைச் சமர்ப்பித்து, அதில் சேனையானது 1947-ம்ஆண்டு வண. வில்லியம்யேசுதாசன் சுவாமியவர்களால் ஸ்தாபிக்கப்பட்டதென்றும், இதன் வளர்ச்சிக்கு, சங். சிஸ்றர்மேரியோசேப்பின் அவர்கள் பெரும்உதவியாய் இருந்தனரென்றும், அவரைத்தொடர்ந்து தொண்டாற்றிய சங். கன்னியாஸ்திரிமார் சேனையின்வளர்ச்சிக்கு இன்னும் அரியதொண்டாற்றி வருவதுமல்லாமல், இந்தப்பங்குக்கு ஒருவர்பின் ஒருவராய் வந்தகுருமார் இச்சேனையின் வளர்ச்சிக்கும், சேவைக்கும் பெரிதும் உதவினரென்றும் குறிப்பிட்டார்.

அடுத்தபடியாகப் பாலர்பிரசீடியங்களால் சமயசம்பந்தமான சிறுநடனம், நடித்தல்கள் நடித்துக்காண்பிக்கப்பட்டன. பின்பு "சேனையும் நற்கருணையும்" என்னும்விடயம்பற்றிச் சகோ. அன்னலூட்சும், "தேவகாரியங்களைப் புறக்கணிப்பவர்களைத் திருத்துவது எப்படி" என்னும்விடயம்பற்றிச் சகோ. எஸ். எம். யோசெவ் அவர்களும் சொற்பொழிவாற்றினர். சகோ. ஏ. எவ். ரி. செல்வத்துரை அவர்கள் நன்றியுரை கூறினர். அதன்மேல் கியூறியாத்தலைவர் வண. பிரான்சீஸ்சுவாமியவர்கள் பேசியபோது, சேனைக்கு இவ்விதமான களியாட்டுகள் அவசியமென்றாலும் அங்கத்தினர் பிறரையும், தம்மையும் பரிசுத்தப்படுத்தும் சேனையின் நோக்கத்தை அசட்டைசெய்யக் கூடாதென்று வற்புறுத்தினர். மேலும், சேனை அங்கத்தினர் ஊழியம்செய்யும்போது சுயநலத்தோடும், வெறும் வெளிப் பகட்டுக்காகவும், பெருமைக்காகவும் அதைச்செய்தால் ஒருபொழுதும் வெற்றிபெறமாட்டார்கள்; அவர்கள் உண்மையானசேவை செய்யமாட்டார்கள்; எல்லாம்போலியாய் இருக்குமென்றும் ஆணித்தரமாக எடுத்துக் கூறினர்.

சிற்றுண்டி உபசாரணையுடனும், முடிவுசெபத்துடனும் விழாக்கள்நிறைவெய்தின. வாழ்கமரியாயின்சேனை! வாழ்க "சம்மனசுகள் இராக்கினி சைனியம்." இது என்றும் மரியாய்க்குச் சேவைசெய்வதாக.

காவலூர்க்கடிதர்.

---

## வன்னித் தபால்

### நேரியகுளம்

அர்ச். கப்பலேந்திமாதா திருநாள்: வளமிக்க வன்னிநகரமாகிய செட்டிகுள விசாரணைப்பங்கைச்சேர்ந்த நேரியகுளத்திலே பண்டைப்பெருமையோடு கோவில்கொண்டிருக்கும் அர்ச். கப்பலேந்திமாதாதிருநாள் பல வருடங்களுக்குப்பின் இவ்வாண்டு சென்ற 15-9-57 ஞாயிறுவாரம் பக்திச்சிறப்பாகக்கொண்டாடப்படத்தேவதாயார்திருச்சித்தமானது. திருநாளுக்குமுந்திய திரித்தினவிழாக்கள் 12-9-57 வியாழக்கிழமைகாலை கொடியேற்றத்துடன் ஆரம்பமாயின. மாதாவின்கோவிலைத் தாங்கிநிற்கும் தூண்களெல்லாம் வச்சிரத்தூண்களாகவிளங்க, நீலவெள்ளைவர்ணம்தீட்டி செயற்கைமலர்களாலும், மாலைகளாலும் எழிலுறச்சிங்காரிக்கப்பெற்றும் பலிபீடம்துலங்க, முதனாள் சனிவாரம்மாலை கட்டளைக்குரவர் வண. ஏ. மூஜேசுவாமியவர்களால் மாலை ஆராதனை நடைபெறலாயிற்று. மறுநாட்காலை 8 மணிக்குப் பலவிடங்களிலுமிருந்து பாடசாலைகளின் ஆசிரியர்களும், மாணவர்களும், மாதாவின்பக்தர்களும் கோவிலிலே திரளாகக்குழுமியிருக்கச் சுவாமியவர்கள் பெரியபாடற்பூசைநிறைவேற்றினர். பாடசாலைகளின் ஆசிரியர்களும், மாணவர்களும் கீதம்இசைத்தனர். அவ்வேளை சுவாமியவர்கள் "தேவதாய் எமதுதாய்" என்பதைப் பீடிகையாகக்கொண்டு அரியதோர் பிரசங்கஞ்செய்தார். பூசைமுடிந்ததும் கோவில்கிறீஸ்துவர்களும், கட்டளைகாரரும் வாத்தியவரிசைகளுடன் சுவாமியவர்களைச் சந்தித்து அன்பளிப்பு வழங்கினர். அவர் அரியபுத்திமதிகூறி அனைவர்க்கும்தமது திருக்காசீர் ஈந்தார்.

சாயந்தரம் 4 மணியளவில் பாடசாலைகளின் மாணவர்களும், ஆசிரியர்களும், திரளானகிறீஸ்துவர்களும் நிரையாய்ச்செல்ல, செபஓசை சங்கீதஓசை மத்தியிலே தேவதாயார் இலுப்பைக்குளம், வைத்தியர் எஸ். எல். எஸ். நாயகம் அவர்களால் அழகுறச்சிங்காரிக்கப்பெற்றிருந்த கேடயத்திலே எழுந்தருள, அலங்கரிக்கப்பட்டிருந்த வீதியூடே சுற்றுப்பிரகாரம் பத்திச்சிறப்பாக நடந்ததும் திருச்சுரூப ஆசீர்வாதம் அருளப்படலாயிற்று. ஈற்றில் வழங்கப்பட்ட அன்னதானத்துடன் திருநாள் இனிதே முடிவெய்தியது.

—வன்னித்தூதன்

# வேதசாட்சிகளின் இரத்தம்

தான்கண்டவைகளையும், கேட்டவைகளையும்பற்றி நீதிமன்றத்தில் உறுதிகூறுவதுபோன்று, உலகின்முன் தான் கைக்கொண்டிருக்கும் வேதத்திற்கும், தான் அனுசரிக்கும் புண்ணியத்திற்கும் ஏற்படும்இம்சையை எதிர்த்துநிற்பதே வேதசாட்சியமாகும். அப்போஸ்தலர்கள் யேசுவினது பகிரங்கவாழ்க்கையின் பலஅம்சங்களுக்கும், அவரது போதனை, மரணத்தின்பின் உயிர்த்தெழுந்தது முதலியவற்றிற்கும் "ஜெருசலேம்நகர், யூதேயா, சமாரியாநாட்டின் பலபாகங்கள், ஏன், அக்காலத்திய உலகமெங்கும் சாட்சிபகர்"ந்தனர் (அப். நடபடி 1 : 8).

அர்ச். முடியப்பரின் மாணமுதல் கிறீஸ்துசமயத்தைத்தழுவி அதைஅனுசரிப்பது கிறீஸ்துவின் அடியார்களுக்கு ஆபத்தாயிற்று. அப்போஸ்தலர்களுக்கும், அவர்களதுபோதனையை ஏற்றுக்கொண்ட கிறீஸ்துவபக்தர்களுக்கும் எந்தநேரத்திலும் மாணவாயில் திறந்தவண்ணமேயிருந்தது. "தாங்கள்விசுவசித்த வேதவாக்கியங்களின் சாட்சியாகக் கொல்லப்பட்டவர்களின் ஆத்துமங்களை"ப்பற்றி அர்ச். அருளப்பர் காட்சியாகமத்தில் வருணிக்கிறார் (VI, 9).

இரண்டாவது நூற்றாண்டிலிருந்து ரோமைச்சக்கிரவர்த்திகளின் பயங்கர வேதகலாபனைகாலத்தில் சமயத்திற்காக உயிர்துறந்த பல்லாயிரக்கணக்கானதியாகிகளை வேதசாட்சிகளாக வழிபடலாயினர். ரோமைஆட்சியில் சமயம் லௌகீகத்துடன் பிணைக்கப்பட்டுச் சக்கிரவர்த்தி தெய்வமாகக்கொண்டாடப்பட, அவர்களுக்குக்குடிகள் மிருகங்களைப்பலியிடுவதும், நைவேத்தியங்கள் பண்ணுவதும் வழக்கமாயிற்று. ரோமைப்படைகள் வெற்றிகண்டால் தேசிய விழாக்களும், விசேஷபொதுப்பலிகளும், நைவேத்தியங்களும்நடைபெறும். புதிய செனற்றர்கள் பதவி ஏற்கும்போதும், கலியாணம்முதலிய விசேடதினங்களிலும் கோயிலில் அர்ச்சனைகளும்உண்டு. கிறீஸ்துவர்களுக்கு இவற்றிலே முறைமைப்படி கலந்துகொள்ள மனம் இடங்கொடாது. ஆகையால், அவர்கள் தேசத்துரோகிகளென எண்ணப்பட்டார்கள். அந்நிய மதத்தில் விழுந்துவிட்டவர்கள் தேசப்பற்றற்றவர்களெனப் பொதுமக்களால் கருதப்பட்டார்கள். கிறீஸ்துவர்களைச் சிங்கங்கள் கிழித்துஉண்ணப் போடவேண்டுமெனச் சீற்றங்கொண்டமக்கள் கூச்சல்போட்டுச் சமயாசமயங்களில் குழப்பஞ்செய்து கிறீஸ்துவர்களைக் கொன்று நரவேட்டையாடினார்கள். கிறீஸ்துவர்களென்ற ஒரேகாரணத்திற்காகத் தனது உறவினர்களையும் மரணத்தீர்ப்பிட்ட டொமீத்சியன் சக்கிரவர்த்தியின்காலத்தில் "கிறீஸ்துவ நாமதேயமே இருக்கப்படாது" என்னும் சுலோகம் உண்டாயிற்று. கிறீஸ்துவனாயிருப்பதே தேசத்துரோகம், மரணதண்டனைக்குரிய குற்றமென்று டொமீத்சியன்சக்கிரவர்த்தியின் ஆட்சியைப்பற்றி எழுதியுள்ள சுயடோனியஸ் என்னும் சரித்திராசிரியர் மூலமாய் நாம் அறியவருகிறோம்.

கொன்ஸ்ரன்ரைன் மகாவேந்தர் கி. பி. 313-ம் ஆண்டு திருச்சபைக்குச் சமாதானத்தைத் தந்தார். அதற்குமுன் 249வருடகாலம் இடையிடையே திருச்சபை கொடிய வேதகலாபனைகளுக் குட்பட்டிருந்தது. நீரோவின் கொடுங்கோலில் எண்ணரியகிறீஸ்துவர்கள் தங்கள்சமயத்திற்காக வதைக்கப்பட்டார்களென்று தசிட்டஸ் எழுதியிருக்கிறார். உலகின் பற்பலபாகங்களிலும் உண்டான வேதகலாபனைகளில் இன்னும் பல்லாயிரக்கணக்கானவர்கள் சமயத்திற்காக உயிர்துறந்துள்ளார்கள். ஐரோப்பாவில் மாத்திரமல்ல, கீழைத்தேசங்களான சீனு, யப்பான், இந்தியா முதலியவற்றிலும் உயிர்கொடுத்த கிறீஸ்துவர்கள் அனந்தம். மமர்ட்டைன் சிறைபோன்ற காற்றில்லாத, வெளிச்சம்புகாத நிலவறைகளிலே பட்டினியும் பசியுமாய்ப் பலநாட்கள் கிடந்தும், சுரங்கங்களில் மிருகங்கள்போல் வேலைசெய்யக் கட்டாயப்படுத்தப்பட்டும், தீபங்களைப்போல் கொளுத்தப்பட்டும், இரும்புச்சீப்புகளால் கீறப்பட்டும், இன்னும் வருணனைக்கடங்காத சித்திரவதைகளுக் குட்பட்டும் மாணமடைந்த ஆடவர்கள், பெண்டிர்கள், சிறுவர்சிறுமிகளைக் கணக்கிட முடியாது. சமயத்தைநிராகரிப்போருக்கு அரசாங்க உத்தியோகங்களும், பணக்குவியலும், உலகசுகபாக்கியங்களும் அருளப்படுமென்ற நயவஞ்சகமொழிகளைத் தட்டிவிட்டு அவமானங்களையும், சொல்லொணுத் துன்பங்களையும் ஏற்றுக்கொண்ட வேதசாட்சிகளின் தைரியம் அதிசயிக்கத்தக்கது. "சகல வல்லமையுள்ள கடவுளின்பலத்தைக் கவசமாகப் பூண்டு, விசுவாசத்தில் தத்தளியாமல் உன்முன் நிற்கிறேன்" என்று அந்திரோனிக்குஸ் சொன்னது உண்மையே. பூரணகர்ப்பவதியான அர்ச். பெலிசித்தாஸ் (பாக்கியம்மாள்) சரீரவேதனைகளைப் பொறுக்கமுடியாது துன்பப்படுகிறதைப்பார்த்த நீதிபதி "உன்னை மிருகங்களுக்கு இரையாகப் போட்டால் என்னசெய்வாய்?" என்று கேட்டான். அதற்கு அவள்: "இப்போது பிரசவவேதனைகளை நான் அனுபவிக்கிறேன்; ஆனால், வேதசாட்சியாகப் பாடுகளை அனுபவிக்கும்போது என்னோடு கூடவிருந்து ஒருவர் என் உபாதைகளைச் சகித்துக்கொள்வார்; ஏனெனில், அவருக்காக நான் துன்பப்படப்போகிறேன்" என்றாள்.

எவ்வளவுக்கெவ்வளவு கிறீஸ்துசமயம் உரலில்அகப்பட்ட தானியம்போல் இடிபடுகிறதோ அவ்வளவுக்கும் அது தழைத்தோங்கும். கிறீஸ்துவர்களைக் கொன்ற ரோமைச்சக்கிராதிபத்தியம் ஒழிந்துபோயிற்று. ஆனால், கிறீஸ்துவேதம் பற்பலநாடுகளிலும் பரவலாயிற்று. திருச்சபையை வதைக்கிறவர்கள் மறைந்துபோவார்கள். கிறீஸ்துசமயம் உலகமுடியுமட்டும் நிலைத்துநிற்கும். "சிலுவையில் அறைந்து கொல்லுங்கள், சித்திரவதை செய்யுங்கள், துண்டுதுண்டாய்க் கிழித்தெறியுங்கள்; உங்கள்கொடுமை பயன் தரப்போவதில்லை; நீங்கள் எங்களை வதைக்கும்போதெல்லாம் நாங்கள் அதிகமாகிறோம்; ஏனெனில், வேதசாட்சிகளின் இரத்தம் கிறீஸ்துசமயத்தின் வித்து" (தெர்த்தூல்லியன்).

---

### நேர்த்தியின் பூர்த்தி

எல்லாம்வல்ல யேசுராசாவின் இரக்கத்தினலும், பரிசுத்த சதாசகாயமாதாவின் தயவினலும் நான் ஆசித்துக்கேட்ட வரம் கிடைத்தது. இதை நேர்த்தியின் பேரால் பிரசுரிக்கிறேன். இன்னும் எனக்கும், எனது குடும்பத்திலுள்ள அனைவருக்கும் வேண்டிய ஆத்துமசரீரநன்மைகளை மேன்மேலும் தந்தருளுமாறு பரிசுத்த சதாசகாயமாதாவிடம் இரந்து கேட்கிறேன்.

Kayts S. B. R.

Printed and Published for the Proprietor by NICHOLAS JAMES, residing at No. 20, Fifth Cross Street, Jaffna, at St. Joseph's Catholic Press, Catholic Mission Premises, Main Street, Jaffna, on Thursday, September 26-1957.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org